



නාවෙළි

NAAVELI

# நாவெளி

நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව

NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE

www.navithanveli.ds.gov.lk ds@navithanveli.ds.gov.lk DSNavithanveli 0755424333

மலர்: 19 ✦ இதழ்: 37 ✦ 2025ஆம் வருடம் ✦ ஆடி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி




## சமூக மாற்றத்தின் திறவுகோல் கல்வி




பிரதேச இளைஞர் கழக சம்மேளன புனரமைப்புக் கூட்டம் 12



சமுர்த்தி ரண்விமன வீடு வழங்கி வைக்கும் நிகழ்வு 13



நாவிதன்வெளி பிரதேச எல்லே அணி கிழக்கில் இரண்டாம் இடம் 14



சிறுவர் அபிவிருத்தி தொடர்பான காலாண்டுக் கூட்டம் 15

அபிவிருத்திப் பாதையில் 04
பொருண்மியம் 06
கதைச்சாளரம் 08
தேகாரோக்கியம் 10
முதலாம் பக்கத்தொடர் 12
பெண்ணியம் 16
மானுடம் 18
அறிவுக் களஞ்சியம் 20
குறுக்கெழுத்துப் போட்டி 23
சட்டம் 24
உலக அரசியல் 26
கல்வி 28
சுற்றுச்சூழல் 30
மருத்துவமும் நாமும் 32
கவிதைச்சாரல் 34
கதம்பம் 35
படலையைத் தேடி 36

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் 19 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். பத்தொன்பது மாதங்களாக மாதாந்த மின்னிதழை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அந்த வகையில் இவ் வருடத்தின் ஏழாவது மலராக பல்வேறு செய்திகள் மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் பத்தொன்பது உங்கள் கரங்களில் இன்று தவழ்கின்றது.

இன்றைய கால கட்டங்களில் சுதந்திரம் என்ற சொல் பல இடங்களிலும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் ஓங்கி ஒலிக்கப்படுகின்றது. இளைஞர்கள் குறிப்பாக யௌவனப் பருவத்தினர் அளவு கணக்கற்று சுதந்திரத்தை அனுபவிக்க முற்படுவதுடன் சமூக நெறிமுறைகள் எல்லாமே தனிமனித சுதந்திரத்தை எல்லைப்படுத்துவதாகவும் வாதிடுகின்றனர். சில மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அரசியல் வாதிகளும் கூட அவர்களுக்காக வாதிடுவதுடன் சமூகக் கட்டுக்கோப்பு உடைவது குறித்து சிறிதேனும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

சுதந்திரம் என்ற கருத்தியல் எப்போதுமே மனித கண்ணியம், முன்னேற்றம் மற்றும் தார்மீக சுயாட்சி போன்றவற்றிற்கான முக்கிய அடித்தளமாகப் பார்க்கப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள சமூகங்கள் சுதந்திரத்தை மிக உயர்ந்த இலட்சியமாகக் கருதி, தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்க நீண்ட காலமாகவும் கடினமாகவும் போராடியுள்ளன. இருப்பினும், கட்டுப்பாடற்றதாகவும், தார்மீக மற்றும் சமூக கட்டமைப்புகள் அகற்றப்பட்டதாகவும் சுதந்திரம் அமையும் போது அது புத்தெழுச்சிக்கு வழிவகுக்காது. மாறாக குழப்பம் மற்றும் காட்டுமிராண்டித்தனத்திற்கே இட்டுச்செல்லும். கட்டுப்பாடற்ற சுதந்திரம் காட்டுமிராண்டித்தனத்திற்கு வழிவகுக்கிறது என்ற கருத்து தனிநபர் பொறுப்பு மற்றும் நாகரிகம் போன்றவற்றின் தன்மை குறித்து முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது.

சுதந்திரம் என்பது வெளிப்புறக் கட்டுப்பாடுகள் இல்லாமல் செயற்படுவதற்கான பேசுவதற்கான சிந்திப்பதற்கான இயலுமை ஆகும். இருப்பினும், ஒவ்வொரு தனிநபரும் மற்றவர்களைக் கருத்தில் கொள்ளாமல் தனக்குப் பிடித்ததைச் செய்ய உரிமை கோரும்போது, சமூக ஒழுங்கில் ஏற்படக்கூடிய முறிவு தவிர்க்க முடியாததாகிவிடும். அத்தகைய நிலையில், சட்டத்தின் ஆட்சி குறைமதிப்பிற்கு உட்பட்டு, தனி நபர்களிடையே பரஸ்பர மரியாதை மறைந்துவிடும். அப்போது கட்டமைப்பு இல்லாத நிலை தோன்றி மனித வாழ்க்கை மோசமானதாகவும், மிருகத்தனமானதாகவும் குறுகியதாகவும் மாறும் என்று தத்துவஞானி தாமஸ் ஹாப்ஸ் வாதிட்டார். கட்டுப்படுத்தப்படாத சுதந்திரம் சமூகத்தை சுயநலமும் வன்முறையும் நிலவும் இயற்கையின் நிலைக்குத் திருப்பிவிடுகிறது என்று இந்தக் கருத்து தெரிவிக்கிறது.

நவீன உதாரணங்கள் இந்தக் கருத்தை வலுப்படுத்துகின்றன. உதாரணமாக, சமூக ஊடகங்கள் என்பது கருத்துச் சுதந்திரம் பெரும்பாலும் உச்சத்திற்கு எடுத்துச் செல்லப்படும் ஒரு இடமாகும். இதன் விளைவாக தவறான தகவல் பரவல், தனியாள் துன்புறுத்தல் மற்றும் சமூக சிதைவு என்பன ஏற்படுகின்றன. இதேபோல், அரசாங்க அதிகாரம் சரிவடைந்த பகுதிகளில், ஏற்படும் அதிகார வெற்றிடம் குற்றவாளிக் கும்பல்கள் அல்லது தீவிரவாத குழுக்களால் நிரப்பப்படுகிறது. அங்குள்ள முழுமையான சுதந்திரம் பொறுப்புக்கூறல் இல்லாதது. இவ்வாறான நிலைகள் அழிவுகரமான உள்ளுணர்வுகளை எவ்வாறு கட்டவிழ்த்துவிடும் என்பதை நிரூபிக்கின்றன.

மேலும், கலாசாரமும் நாகரிகமும் சுதந்திரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான சமநிலையின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்றன. கல்வி, நெறிமுறைகள், மதம் மற்றும் சட்டம் ஆகியவை மனித நடத்தையை ஆக்கபூர்வமான நோக்கங்களை நோக்கி வழிநடாத்த உதவுகின்றன. இந்த வழிகாட்டும் கொள்கைகள் இல்லாமல் கிடைக்கும் சுதந்திரம் தனிநபர் மற்றும் கூட்டுச் செழிப்பிற்கான பாதையாக இல்லாமல் சுயநலத்திற்கான ஒரு பாதையாக மாறும். பொறுப்புணர்விலிருந்து விலகிய சுதந்திரம் எப்போதுமே ஆபத்தானதாக மாறும்.

இருப்பினும், இந்த வாதத்தை சுதந்திரத்தை நிராகரிப்பதாக தவறாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதும் முக்கியம். மாறாக, இது ஒரு நுணுக்கமான புரிதலுக்கான அழைப்பு ஆகும். சுதந்திரம் பொறுப்புக்கூறலுடன் இணைக்கப்படவேண்டும், பகுத்தறிவால் வழிநடாத்தப்படவேண்டும், நியாயமான சட்டங்களால் ஆதரிக்கப்பட வேண்டும். தனிநபர்களும் சமூகங்களும் ஒரு தார்மீக கட்டமைப்பிற்குள் சுதந்திரத்தைத் தழுவும்போது, சுதந்திரம் முன்னேற்றத்திற்கான ஒரு சக்தியாக மாறுகிறது. ஆனால் சுதந்திரம் எல்லைகள் இல்லாமல் அனுபவிக்க அனுமதிக்கப்படும்போது, அது காட்டுமிராண்டித்தனத்திற்குள் சென்றுவிடும் அபாயம் உள்ளது. எனவே, கட்டுப்பாடற்ற சுதந்திரத்தின் இறுதி நிலை, நெறிமுறைகள் மற்றும் ஒழுங்கிலிருந்து விடுபட்டு, விடுதலைக்கு அல்லாமல், மாறாக அழிவுக்கு வழிவகுக்கும் என்பதே நிதர்சனமாகும்.

என்றும் அன்புடன்
ஆசிரியர்



# நாவிதன்வெளி பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் அரிசி ஆலைகளின் அளப்பரிய பங்கு

*BY :*
*Mrs. Gajenthini Manivannan - Development Officer.*
*(Under the Guidance of Mrs. T. Kirupairajah, Deputy Director of Planning)*

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதியில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அரிசி ஆலையினைக் கொண்டமைந்த வரலாற்றுப் பெருமைக்குரியது எமது நாவிதன்வெளி பிரதேசமாகும். அன்று மிகப்பெரிய அரிசி ஆலை அமையப் பெற்றிருந்த இடமே இன்று எமது நாவிதன்வெளி பிரதேச செயலகம் அமையப் பெற்றிருக்கும் இடமாகும். இந்த அரிசி ஆலையிலிருந்தே பல நாடுகளுக்கு அரிசியானது ஏற்றுமதி செய்யப்பட்டது. பல அரசியல் மாற்றங்களாலும், காலநிலை மற்றும் பல்வேறு யுத்த சூழ்நிலை போன்ற காரணிகளாலும் இங்கு அமையப்பெற்றிருந்த மிகப் பெரிய அரிசி ஆலையானது இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயுள்ளது. இருந்த போதிலும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தியில் பிரதேசத்தில் அமையப்பெற்றிருக்கும் அரிசி ஆலைகளின் பங்கானது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

எமது பிரதேச செயலகப்பிரிவில் விவசாயத்தினை ஜீவனோபாய தொழிலாக கொண்ட 4545 விவசாயக் குடும்பங்கள் இங்கு வசிக்கின்றன. 9392 ஏக்கர் விவசாயக் காணிகள் உள்ளன. இங்குள்ள மக்கள் விவசாயத்தினை பிரதான தொழிலாக மேற்கொண்டு தமது உணவுத் தேவையினையும் பூர்த்தி செய்வதோடு பொருளாதாரத்தினையும் ஈட்டி வருகின்றனர்.

இங்கு சிறுபோகம் மற்றும் பெரும்போகப் பயிர்ச்செய்கை மூலம் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல்லானது எமது பிரதேசத்தில் உள்ள அரிசி ஆலைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு களஞ்சியப் படுத்தப்படும் நெல்லானது அரிசியாக்கப்பட்டு எமது பிரதேசமக்களுக்கும் வெளிமாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இங்கு காணப்படுகின்ற அரிசி ஆலைகளானது சகல வசதிகளை கொண்டதாகவும் அதாவது, நெல்லினை கொள்வனவு செய்து காய வைத்து அதனை குற்றி அரிசியாக்கும் இயந்திர உபகரணங்கள், மற்றும் நெல்லை கொள்வனவு செய்து வைக்கக்கூடிய களஞ்சிய சாலைகள், போக்குவரத்து வசதிகள் கொண்டு காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் 25 அரிசி ஆலைகளும் முற்று முழுதாக பாமர மக்களுக்கு வாழ்வாதாரத்தினை பெற்றுக் கொடுக்கின்ற களங்களாக அமைந்து காணப்படுகின்றன. நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் காணப்படுகின்ற 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 1000இற்கும் மேற்பட்ட பாமர விவசாய மக்கள் ஒவ்வொரு போகத்திலும் தங்களது வாழ்வாதாரத்தினை ஈட்டிக்கொள்கின்றார்கள்.

எமது பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட 07 கிராம சேவகர் பிரிவுகளில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் காணப்படுகின்றன. அவற்றில் 25 நடுத்தர அளவிலான அரிசி ஆலைகள் பற்றிய ஓர் பார்வை.

(இலங்கை அரிசி ஆலைகள் தொடர்பான ஆய்வு - 2025, இது ஹெக்டர் கொப்பேகடுவ கமநல பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்நிலைத் தரவிற்காக சேகரிக்கப்பட்ட ஓர் ஆய்வறிக்கையாகும்)

மேற்குறிப்பிட்ட 25 அரிசி ஆலைகளில் தொடர்ச்சியான முறையில் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற போதிலும் பெரும்போக மற்றும் சிறும்போக அறுவடைகளின்போது கூடுதலாக அளவிற்கு நெல் கொள்வனவும் அரிசி உற்பத்தி என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| தொ. இல | அரிசி ஆலைகளின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | களஞ்சியப்படுத்தப்படும் நெல்லின் அளவு (MT) | அரிசி அரைக்கும் திறன் (MT) |
|---|---|---|---|---|
| 1 | FRS அரிசி ஆலை | சவளக்கடை | 300 | 20 |
| 2 | மின்கா அரிசி ஆலை | சவளக்கடை | 300 | 15 |
| 3 | கனிபா அரிசி ஆலை | சவளக்கடை | 170 | 07 |
| 4 | சலாம் அரிசி ஆலை | சவளக்கடை | 300 | 20 |
| 5 | சனா அரிசி ஆலை | சவளக்கடை | 150 | 15 |
| 6 | அஸ்னி அரிசி ஆலை | சொறிக்கல்முனை - 01 | 325 | 15 |
| 7 | சவ்னா அரிசி ஆலை | சொறிக்கல்முனை - 03 | 100 | 05 |
| 8 | அப்பலோ அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 300 | 15 |
| 9 | WELCOME அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 330 | 20 |
| 10 | JAR அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 300 | 20 |
| 11 | அசாவ் அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 300 | 20 |
| 12 | சபா அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 120 | 02 |
| 13 | அஸ்கி அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 150 | 08 |
| 14 | STAR அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 100 | 12 |
| 15 | NEW MAJEED அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 04 | 28 | 10 |
| 16 | பிதுசனா அரிசி ஆலை | சாளம்பைக்கேணி - 05 | 400 | 15 |
| 17 | NEW LANKA அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 120 | 15 |
| 18 | OG அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 100 | 07 |
| 19 | BA அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 100 | 6.5 |
| 20 | NEW அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 150 | 08 |
| 21 | CENTRAL அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 350 | 20 |
| 22 | JAWFER அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 250 | 15 |
| 23 | NRN அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 150 | 10 |
| 24 | HAMDI அரிசி ஆலை | மத்திய முகாம் - 03 | 200 | 10 |
| 25 | நாயகி அரிசி ஆலை | நாவிதன்வெளி - 01 | 132 | 02 |

இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல்லானது ஏனைய அதாவது மட்டக்களப்பு, பொலன்னறுவை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லினை அரிசியாக்கி அவ்வரிசியை விநியோகிக்கும் வழிகளாக மொத்த விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தல், சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தல், நேரடி நுகர்வோருக்கு விற்றல், ஏனைய வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற முறைகளில் சந்தைப்படுத்தல் நடைபெறுகின்றது.

இவ்வாறான நிலையில் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லினைக் கொள்வனவு செய்யும் போது பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர். அதாவது கூடுதலான ஈரப்பதன், நெல்லில் இருந்து அரிசி கிடைக்கும் அளவு குறைவு, பணமின்மை, உத்தரவாதக் கடன்களைப் பெறுவதில் சிரமம், நெல்லில் கூடுதலாக அழுக்குகள் மற்றும் கழிவுகள் இருப்பது, பிரமுக அரிசி ஆலையாளர்கள் உயர் விலையில் கொள்வனவு செய்கின்றமை, நெல்விலைகளில் அதிக மாற்றங்கள் ஏற்படுதல் போன்ற சிக்கல்கள் தங்கள் மத்தியில் ஏற்படக்கூடிய பாரிய சவால்கள் என அரிசி ஆலை உரிமையாளர்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர்.

# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2025 - 2029

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## 08. செயற்படுத்தும் முறைமை

### 8.1. கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இனங்காணுதல்

2025 ஆண்டுக்குள் ஆகக்குறைந்தது 1000 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குவதங்கு எதிர்பார்க்கப் படுகின்றது. அதன் பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள மற்றும் 2 வருடங்களில் இற்றைக்குட்படுத்திய கிராம அபிவிருத்தி திட்டங்களுடனான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையிலும் பல்பரிமாண வறுமையானது உயர்மட்டத்தில் உள்ள 03 கிராம சேவகர் பிரிவுகளை அடையாளம் கண்டு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

## Criteria to Prioritize GN Divisions

| Factor | Measure | Weight | |
|---|---|---|---|
| Income Level (30) | Percentage of low -income families in the village | Less than 10%<br>10%-20%<br>More than 20% | 10<br>20<br>30 |
| Drinking Water (10) | Percentage of families without safe drinking water facilities | Less than 5%<br>5% -10%<br>More than 10% | 03<br>07<br>10 |
| Sanitary Facilities (10) | Percentage of families without adequate sanitation facilities | Less than 5%<br>5%-10%<br>More than 10% | 03<br>07<br>10 |
| Housing Facilities (10) | Percentage of families without permanent house | Less than 5%<br>5%-10%<br>More than 10% | 03<br>07<br>10 |
| Electricity Facilities (10) | Percentage of families without electricity facilities | Less than 5%<br>5%-10%<br>More than 10% | 03<br>07<br>10 |
| Education (10) | Percentage of children of school -going age who are out of school | Less than 5%<br>5%-10%<br>10%-15%<br>More than 20% | 02<br>05<br>07<br>10 |
| Health Facilities (10) | Average distance from the Grama Niladhari Division to the Government Medical Center/Hospital | Less than 2Km<br>2Km-5Km<br>5Km-10Km<br>More than 10Km | 02<br>05<br>07<br>10 |
| Transport Facilities (10) | Average distance from the Grama Niladhari Division to a road with public transport facilities | Less than 2Km<br>2Km-5Km<br>5Km-10Km<br>More than 10Km | 02<br>05<br>07<br>10 |

மேற்குறிப்பிட்ட அளவு கோல்களின்படி நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் மத்திய முகாம் - 02,06 மற்றும் சாளம்பைக்கேணி-05 ஆகிய 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## 8.2. கிராம அபிவிருத்தி திட்டத்தினை (VDP) தயாரித்தல்

மக்கள் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் இளஞ்செயற்பாட்டாளர்கள் உட்பட்ட மக்களைக் கொண்ட கிராமக்குழு ஒன்றினூடாக (வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்தினூடாக நிறுவப்பட்ட சமூக மேம்பாட்டுச் சபை "Community Development Council" ஊடாக கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் போது மேலே இலக்கம் 07இன் கீழ் குறிப்பிட்ட துறைகள் உள்ளடங்கியுள்ள பிரகாரம் கருத்திட்டங்களை இனங்காணல்.

அவ்வாறு இனங்காணப்படும் கருத்திட்ட முன்மொழிவுகள் ஒவ்வொரு துறைக்கேற்ப ஒதுக்காது ஒட்டுமொத்த முன்னுரிமை அடிப்படையில் அணிதிரட்டி கிராம அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

இனங்காணப்பட்ட பிரிவுக்குரியதாக ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தித் திட்டத்தினை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துவது போதுமானதாகும்.

உத்தேச வேலைத்திட்டம் தொடர்பிலும், உத்தியோகத்தர்களின் மற்றும் கிராமியக் குழுவின் கடமைப் பொறுப்புகள் தொடர்பிலும் உரிய தரப்பினருக்கு முன்கூட்டியே விளக்கமளிக்கப்படல் வேண்டும்.

## 8.3. பயனாளிகளை இனங்காணுதல்

தொழில் முயற்சி அபிவிருத்தி, வருமானமீட்டுதல், திறன் மற்றும் ஆற்றல் விருத்தி, வீடமைப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற வழங்க வேண்டிய கருத்திட்டங்களுக்கு குறைந்த வருமானம் பெறுவோரின் வரம்புக்குள் பயனாளிகளை இனங்காணுதல் வேண்டும்.

## 8.4. கிராமிய அபிவிருத்தித் திட்டத்தினைச் சமர்ப்பித்தல்.

**8.4.1.** மேலே 8.1 இன் பிரகாரம் இனங்காணப்பட்ட 3 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் தயாரிக்கப்பட்ட, இற்றைப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டத்தினை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினது அங்கீகாரத்துடன் மற்றும் மாவட்ட செயலாளரின் ஊடாக கிராமிய அபிவிருத்தி பணியகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஆனாலும் ஏதாவது திட்டங்கள் பிரதேச செயலகங்களின் அப்பால் இருக்குமாயின் அவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினது அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**8.4.2.** அதே போல அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளில் இருந்து பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் பிற நேரொத்த அமைச்சுகள் மட்டத்தில் செயற்படுத்தக்கூடிய கருத்திட்ட முன்மொழிவுகளை உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சமர்ப்பித்த கருத்திட்ட முன்மொழிவு ஆவணமொன்றினை கிராம அபிவிருத்தி பணியகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

தொடரும்...

தொகுப்பு:
எம்.எச். ஜலிலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்

மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்:
எம்.ஐ. அலியார்
சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்



சிறுகதை

# கண்ணியம் தவறில்...

வழமைக்கு மாறாக அவள் மனதில் ஏதோ ஒரு சங்கடம் ..அவள் மனதை வதைத்துக்கொண்டே இருந்தது. “கணீர்” என ஒரு சத்தம் கடிகாரம் இரவு பத்து மணியைக் காட்டி நிற்கின்றது. அவசரமாக தனது கடமைகளை முடித்து விட்டு உறங்க படுக்கை அறைக்கு சென்றாள் மாலா. அங்கு புன்னகை பூத்த முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த தனது இரு பிள்ளைகளையும் முத்தமிட்டு அவர்களது தலையைத் தடவி நிம்மதிப் பெருமுச்சுவிட்டு கைபேசியைப் எடுத்துப்பார்க்க ஆரம்பித்தாள்...

அவளால் நம்பமுடியவில்லை என்ன ஒரு சம்பவம். இன்று காலையில் சந்தித்த அந்த நபர்...நம்பமுடியவில்லை என்ன நடந்தது... மீண்டும் பார்க்க ஆரம்பிக்கிறாள்... Net load ஆகின்றது... File open ஆகவில்லை... இது அவர் தானா?

தனது அலுவலக நண்பிக்கு அழைப்பை ஏற்படுத்துகிறாள், "பிரியா ஒரு News பார்த்தாயா? இன்று மதியம் என்னோடு பேசிய அந்த பாட்டி இறந்து விட்டதாக பார்த்தேன். அவருடன் நான் அப்படி பேசியிருக்க கூடாது" எனப் புலம்பினாள் மாலா.

"அடி பைத்தியக்காரி அதற்கு நாம் என்ன செய்வது அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம், நமக்கென்னடி தெரியும்? தேவையில்லாததை யோசிக்காம போய்தூங்கு நாளைக்கு சந்திப்போம்" என்று கூறி கைபேசியை துண்டித்தாள் பிரியா. மாலாவோ புரண்டு புரண்டு படுக்கிறாள்? தூக்கம் வரவில்லை. பல மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர் கண்ணயர்ந்து விட்டாள். மறுநாள் விடிந்து விட்டது. பரபரப்புடன் தனது கடமைகளைச் செய்து விட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டாள்.

அவளது நிழலே அவளைக் கேவலமாகப் பார்த்தது. சக உத்தியோகத்தர்கள் அவளை பார்த்து கடினமாக பேசுவது போல் தோன்றியது. நான்

என்ன தவறு செய்தேன். அவளே, தன்னைத்தானே சமாதானம் செய்ய ஆரம்பித்தாள். இருப்பினும், அவர் பற்றிப் பிடித்த கையைத் தட்டி விட்ட சம்பவம் கண்முன்னே தோன்றியது.

கறுப்பு நிற மேற்சட்டையுடன் சிவப்பு நிறச் சாரியும் அணிந்து கொண்டு சோர்ந்த உடல் தோற்றத்துடன் அந்த பாட்டி கையில் ஒரு கடிதத்துடன் அலுவலக வளாகத்தினுள் நின்று கொண்டிருந்தார். மாலாவோ அவரைப் பெரிதும் பொருட்படுத்தாது தனது உணவுப் பொதியை திறப்பதற்காக கையை சுத்தம் செய்துவிட்டு வந்திருந்தாள்.

“மகள் எனக்கு உடம்புக்கு முடியல. சரியான காச்சல் நிற்கக்கூட முடியவில்லை. இதய நோய் வேறு.. செலவுக்கு காசி இல்லாம இருக்கு இந்த கடிதத்தினை உங்கட கையொப்பத்தத்துடன் கொண்டு போனால் காசி தருவாங்க என்று ஒரு நிறுவனக்காரர் சொன்னார்” எனக் கூறியபடி பையிலிருந்த கடிதத்தை நீட்டினார் பாட்டி.. நீட்டப்பட்ட கை சரிந்து மாலாவின் கையில் பட்டது.

மாலாவோ கொஞ்சம் எரிச்சலடைந்து “கையை எடுங்கம்மா.... உங்களுக்கு முடியலண்டா வேறு யாரையும் கூட்டி வரவேண்டியதுதானே.. ஒரே நாற்றமா இருக்கு சாகப்போற காலத்தில உங்களுக்கு எதுக்கு காசி...நானும் வீட்டில் 02 பிள்ளைகளை வைச்சிருக்கன். உங்கட காய்ச்சல் எனக்கு தொற்றினால் என்ட பிள்ளைகளை யார் பார்ப்பது” எனக் கையைத் தட்டி விட்டு, “போங்க, போய் இருங்க சாப்பிட்டுட்டு வாரன்’; என்று கடினமாகத் திட்டிவிட்டாள். பாட்டியின் மனம் என்ன நினைத்திருக்கும்...

பாட்டியோ மனதுடைந்து அறையை விட்டு வெளியேறி விட்டார். மாலா சாப்பிட்டு முடித்துவிட்டு பாட்டியை அழைத்த போது அந்த இடத்தில் பாட்டி இல்லை. சுற்றுமுற்றும் தேடிப் பார்த்துவிட்டு தனது வழமையான வேலையைப் பார்க்கத் தொடங்கினாள் மாலா. அந்த சம்பவம் மாலாவின் மனதை வருத்திக் கொண்டே இருந்தது.

அந்த பாட்டியின் இறுதி நிமிடம், என் போன்ற ஒருவரின் கண்ணியமற்ற பேச்சு நடத்தை என்பவற்றினால் பாதிக்கப்பட்டு விட்டதே என மனம் வருந்தினாள். நான் கொஞ்சம் கண்ணியமாக பேசியிருக்கலாம். நம்மை தேடிவரும் பொதுமக்களுக்குத் தேவைகளைச் செய்யக் கொஞ்சம் தாமதம் ஏற்படினும் நாம் அவர்களிடம் நடந்துகொள்ளும் விதம் அவர்களுக்கு ஒரு பலத்தை ஏற்படுத்தும் அல்லவா? அலுவலகத்திற்கும் மேலும் நன்மதிப்பு ஏற்படும், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நான் தவற விட்டுவிட்டேனே என மனம் வருந்தினாள்...

இருப்பினும் என்ன பயன்? காலம் கடந்த ஞானம் பயனில்லை தானே.. குற்ற உணர்வுடன் நல்ல காரியம் ஒன்றையாவது செய்து விடவேண்டும் என்ற மனத்திடத்துடன் தனது பணியைத் தொடங்கினாள் மாலா..

நன்றி.

**யோ. கயல்விழி**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**

நாவெளி NAAVELI
நாவெளி
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
வெள்ளிக்கிழமை / மலர் - 19 / இதழ் - 37 / 25 ஆடி 2025




கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# நல் வாழ்விற்கான சிறந்த உள ஆரோக்கியம்

ஆரோக்கியமான வாழ்வின் முக்கியமான ஒரு அங்கமாக ஆரோக்கியம் இருப்பதுடன் ஒருவரின் உடல் ஆரோக்கியத்திலும், உள ஆரோக்கியத்திலும் இது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. பல்வேறு காரணங்களின் நிமிர்த்தம் பெரும்பாலான சிறுவர்களும், பதின்மவயதினரும் உளவியல் தாக்கங்களிற்கு உள்ளாகுகின்றார்கள் என்பது ஒரு பொதுவான உண்மையாகும்.

சிறுவர்களிலும், பதின்மவயதினரிலும் உளவியல் தாக்கங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள். வளரும் பருவத்தில் சிறுவர்களிலும், பதின்மவயதினரிலும் ஏற்படுகின்ற உடலியல் மற்றும் உளவியல் மாற்றங்கள்.

* போதுமான தூக்கமின்மை.

* தொலைக்காட்சி, கணனி என்பவற்றுடன் அதிக நேரத்தைச் செலவழித்தல்.

* கல்வி மற்றும் பரீட்சைகளில் முகங்கொடுக்கின்ற சவால்கள். விளையாடுவதற்கும்.

* சுறுசுறுப்பாக இருப்பதற்கும் போதிய நேரமின்மை.

* அடிக்கடி இரைச்சல் மிகுந்த ஒலிகளைச் செவிமடுத்தல் தாம் வாழும் சூழலில் எதிர்கொள்கின்ற முரண்பாடுகளும், துஷ்பிரயோகங்களும் நண்பர்கள் மற்றும் சகோதரர்களுடன் ஏற்படும் சண்டைகள் புகைத்தல், மதுபானப் பாவனை, போதைவஸ்துப் பாவனை மற்றும் முறையற்ற பாலியல் தொடர்புகளில் ஈடுபடுதல்.

* உளவியல் தாக்கமானது மன அழுத்தத்தின் ஆணிவேராக இருப்பதுடன், ஒருவர் தனது வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைவதற்கும் தடையாக உள்ளது. ஒருவர் மன அழுத்தத்திற்கு ஆளாகும் போது அதன் ஒரு அடையாளமாக உடல் சார்ந்த அசௌகரியங்களை உணர முடியும்.

## உளவியல் தாக்கத்தின் அறிகுறிகள்

* தலைவலி, கழுத்து மற்றும் தோள்மூட்டில் தசை வலி.

* எப்போதும் உடல்வலியைப் பற்றிக் கதைத்தல்.

* பசியின்மை, வயிற்றில் எரிச்சல் இருத்தல்.

* ஒழுங்கற்ற தூக்கம், படிப்பில் கவனம் சிதறுதல், பொழுதுபோக்கு, விளையாட்டுகளில் நாட்டம் குறைதல்.

* உடல் பலவீனமாக உணர்தல், விரைவாகக் களைப்படைதல்.

* நோயெதிர்ப்பு சக்தி குறைந்து, அடிக்கடி நோய்வாய்ப்படுதல்.

* வீடு மற்றும் சமுதாயத்தில் மற்றையவர்களுடனான உறவில் விரிசல் ஏற்படுதல்.

* இலகுவில் கோபம் கொள்வதனால் தேவையற்ற பிரச்சினைகளைச் சந்தித்தல்.

மனப்பதற்றத்தைத் தவிர்த்து மனதை ஆறுதல் படுத்தக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவது அல்லது அமைதியான வாழ்க்கையை மேற்கொள்வது போன்ற பலவகையான அனுகூலங்களை ஏற்படுத்துகிறன.

## உளவியல் ஆரோக்கியத்தின் நன்மைகள்

* கிரகித்தல், ஞாபகசக்தி, புத்திக்கூர்மை போன்றன அதிகரித்தல்.

* தன்னம்பிக்கை மற்றும் சுதந்திரம் போன்றவை விருத்தியடைதல்.

* கல்விப் பெறுபேறுகள் சிறப்பாக இருத்தல்.

* கோபம், வெறுப்பு, பொறாமை போன்ற எதிர்மறையான குணங்களை நன்றாகக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல். வீடு, பாடசாலை மற்றும் சமுதாயத்தில் சிறந்த உறவைப் பேண முடிதல். விளையாட்டு மற்றும் ஏனைய மேலதிக நடவடிக்கைகளில் வெற்றிகள் கிட்டுதல்.

* நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் உடல் ஆரோக்கியம் அடையும்.

சிறந்த உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதற்குப் பல விடயங்களை நாம் பின்பற்ற வேண்டும். அவற்றை நான்கு பிரதான பகுதிகளாக வகைப்படுத்தலாம்.

1. உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் சூழ்நிலைகளைத் தவிர்த்தல்.

2. மனதிற்கு அமைதியைத் தருகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

3. கலாசார மற்றும் சமய விழுமியங்களை வளர்த்துக் கொள்ளுதல்.

4. மனதை அமைதிப்படுத்துகின்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்.

நமது நாளாந்த வாழ்க்கையில் இதற்கான வழிமுறைகளை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளலாம் என்பதை இப்போது பார்ப்போம்.

1. உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் சூழ்நிலைகளைத் தவிர்த்தல்

மேலே குறிப்பிட்டுள்ள காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம் ஆறுதலான, சிறப்பான மனநிலையை அடையலாம்.

2. மனதிற்கு அமைதியைத் தருகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

* நேர்மறையான, உயர்ந்த மனப்பாங்கை விருத்தி செய்தல். ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு நகைச்சுவை மற்றும் களிப்பு போன்ற உணர்வுகளை வளர்த்துக் கொள்ளல்.

* உடற்பயிற்சி செய்து, சுறுசுறுப்பாக இருத்தல். நேரத்தை எவ்வாறு செலவழிப்பது என்பதைத் திட்டமிடுதல்.

* உங்களது அன்பிற்குப் பாத்திரமானவர்களுடன் போதியளவு நேரத்தைச் செலவிடுதல்.

* நிம்மதியான, போதுமான தூக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

பொழுதுபோக்கிற்காக நாங்கள் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் நமது மன அமைதியைப் பாதித்து. உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவையாவன:

1. தொலைக்காட்சி பார்த்தல்.
2. சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தில் அதிக நேரம் செலவழித்தல்,
3. அர்த்தமற்ற, இரைச்சல் மிகுந்த பாடல்களைச் செவிமடுத்தல்.
4. பொருத்தமற்றவர்களுடன் எமது நேரத்தைச் செலவழித்தல்.
5. புகையிலை, மதுபானம் மற்றும் ஏனைய அடிமையாக்கக்கூடிய மருந்துகளைப் பாவித்தல்.

தொடரும்...

BY:
Dr M.B.Mohamed Silmy
Medical officer Incharge
PMCU Chenaikudiyiruppu

# பிரதேச இளைஞர் கழக சம்மேளன புனரமைப்புக் கூட்டம்

-திரு. கே. பிரபாகரன்

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளன புனரமைப்பு கூட்டம் 2025 ஜூலை 08ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் திரு. கே. பிரபாகரன் அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளைஞர் விவகார விளையாட்டு துறை அமைச்சின் (Ministry of Youth and Sports) மாவட்ட இணைப்பாளர் திரு. சமன் அத்துக்கோறள, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் திரு. எச். யு. சுஜந்த, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி. கங்கா தமயந்தி சாகரிகா, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. எஸ். சிறிவர்த்தன, நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா ஆகியோருடன் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் 2025ஆம் ஆண்டிற்கான இளைஞர் கழக நாவிதன்வெளி பிரதேச சம்மேளனத்திற்கான புதிய நிருவாக சபை தெரிவும் இடம்பெற்றது.
























# சமுர்த்தி ரண்விமன வீடு வழங்கி வைக்கும் நிகழ்வு

-எ.சி.எம். றினோஸன்





சமுர்த்தி ரண்விமன விசேட வேலைத்திட்டத்தின் மூலம் மத்தியமுகாம்-04 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கான ரூபா. 750,000.00 பெறுமதியான வீடு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆடி 15ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நாவிதன் வெளி சமுர்த்தி வங்கி முகாமையாளர் திரு. M. I. அஷாத், மத்தியமுகாம் வங்கி முகாமையாளர் திரு. A. L. முகம்மது தம்பி ஆகியோரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விடய பொறுப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். மேலும் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் 30ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களால் நாவிதன்வெளி சமுர்த்தி வங்கி முன்றலில் மர நடுகையும் இடம்பெற்றது.

# மாணவர்களுக்கான "சிப்தொர" கொடுப்பனவுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு

-க. புஸ்பராணி

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் 30 வருட நிறைவை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2023/25 மற்றும் 2024/26 கல்வியாண்டுகளுக்கான "சிப்தொர" கொடுப்பனவுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆடி 02ஆம் திகதியன்று நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், முகாமைத்துவ பணிப்பாளர் திரு. எம். ஐ. ஆசாத், கருத்திட்ட முகாமையாளர் திரு. ப. தமிழ்வாணன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. க. புஸ்பராணி ஆகியோரும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கிவைத்தனர். இதன் போது பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில், குறித்த மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றி பாடசாலை, மற்றும் பெற்றோர் மத்தியில் தகவல்களைப் பெற்று வாராந்த அறிக்கையினைத் தயாரித்து வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.



# நாவிதன்வெளி பிரதேச எல்லே அணி கிழக்கில் இரண்டாம் இடம்

-ப. வசந்த்





கிழக்கு மாகாண எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தினைப்பெற்ற நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெண்கள் அணியினர் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டு நாவிதன்வெளிப் பிரதேசத்திற்கும், அம்பாரை மாவட்டத்திற்கும் பெருமையினைத் தேடித் தந்துள்ளனர். இவ் அணியானது முதல் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியினரை வெற்றி பெற்று, இறுதி போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியினருடன் மோதியிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணியினர் 30 பந்துகளில் 09 ஓட்டங்களைப் பெற்று இருந்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட அணியினர் 30 பந்துகளில் 07 ஓட்டங்களைப் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணியினர் 30 பந்துகளில் 01 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அம்பாறை மாவட்ட அணியினருக்கு 04 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கை வழங்கி இருந்தார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட அணியினர் 30 பந்துகளில் 02 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இரண்டாம் இடத்தினைத் தழுவி இருந்தார்கள் என்பது பாராட்டத் தக்கது.

# சிறுவர்களுக்கான "கப்பகறு டெகுறு" உதவித்திட்டம்

-டி. யாசுகி

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களமூடாக (Department of Probation and Child Care Services) வழங்கப்படும் சிறுவர்களுக்கான கப்பகறு டெகுறு உதவித்திட்டம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான உதவிப்பணம் வழங்கி வைக்கும் நிகழ்வு 2025 ஜூன் 30ஆம் திகதி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. டி. யாசுகி அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிதி உதவியாளர் திருமதி. க. அமிர்தலிங்கம் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.





# சிறுவர் அபிவிருத்தி தொடர்பான காலாண்டுக் கூட்டம்

-டி. யாசுகி



2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான சிறுவர் அபிவிருத்தி, பால்நிலைசார் வன்முறைகள் மற்றும் உளச்சமூக ஒன்றிய கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆனி 27ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.



நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. டி. யாசுகி அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய பணிமனை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அரச சார்பற்ற நிறுவனங்களான SWOAD, ADWN, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி முன்னணி ஆகியவற்றின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





மேலும், இதன்போது நாவிதன்வெளி பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாகவும் அவர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்விற்கான நிதி அனுசரணையை சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம் (Department of Probation and Child Care Services) வழங்கியிருந்தது.





# பெண்கள் தமது சமூகங்களில் எழுந்து நிற்பதை வலிமைப்படுத்துவோம்!

திருமதி. சுபாஷினி சிவதர்சன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா தெற்கு.

பெண்கள் எமது சமூகத்தின் முதுகெலும்பாக உள்ளார்கள். பெரும்பாலும் தமது குடும்பங்களை கட்டியெழுப்புவதிலும் குழந்தைகளின் உயரிய நலன்களுடன் கூடிய கல்வியைக் கற்பிப்பதிலும் உள்ளூர் பொருளாதார உற்பத்திக்கு பங்களிப்புச் செய்து தமது வருமானத்தை தக்கவைத்துக் கொள்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள்.

'அவள் வலிமையானவள் மற்றும் திறமையானவள் அவளுடைய கைகள் எப்போதும் அலுவல்களாகவே இருக்கும்' (நீதிமொழிகள் 31:17) என்பதற்கிணங்க அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் வரையறுக்கப்பட்ட தடைகள் மற்றும் சமூக விதிமுறைகள், சமூகத்தின் தலைமைப் பொறுப்பு மற்றும் முடிவெடுப்பதில் முழுமையாக பங்கேற்கும் திறனில் அவர்கள் மட்டுப்பாடுகளைச் சந்திக்கின்றார்கள். பெண்கள் தத்தமது சமூகங்களில் எழுந்து நிற்க அவர்களுக்கான அதிகாரங்களை அளிப்பதன் மூலம் நாம் மிகவும் அழகான, சமத்துவத்தை உள்ளடக்கிய வளமான சமூகங்களைக் காண முடியும்.



## தடைகளை உடைத்தல்

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் எதிர் கொள்ளபடும் முதன்மையான சவால்களில் ஒன்று பாலின அடிப்படையிலான பாகுபாடு அதிகமாக காட்டப்படுவதாகும். கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் சுகாதாரம் போன்றவற்றில் சமனற்ற அணுகல் போன்ற பல்வேறு வடிவங்களில் இது வெளிப்படுத்தப்படும். இத்தடைகளைத் தீர்க்க பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் எமது சமூகங்களில் செயற்படுத்த வேண்டியது அவசியமாகும். இதைத்தான் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது" என்கிறார்.

## கல்வி

பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் கல்வியில் முதலீடு செய்வது வறுமையின் நச்சுவட்ட சுழற்சியை உடைப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கும் உறுதுணையாக இருக்கும். தரமான கல்விக்கான அணுகல்களை எமது சமூகங்களில் வழங்குவதன் மூலம் பெண்கள் தமது சமூகங்களில் முழுமையாகப் பங்கேற்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக் கொள்வார்கள்.



## பொருளாதார வாய்ப்புகள்

பெண்கள் தமக்குப் பொருத்தமானதும் ஆர்வமானதுமான வணிக செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களுக்கு ஆதரவான சூழல்களை உருவாக்குதல் வேண்டும். தேசத்தின் மேம்பாட்டிற்கு பெண்கள் பொருளாதார ரீதியில் சுயாதீனமடையும் போது அவர்களுக்கான பாதுகாப்பான மற்றும் நம்பகமான சூழலை உருவாக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு தொழில் தருநருக்குமுண்டு. அத்துடன் பாலினத்தை உள்ளடக்கிய வேலைவாய்ப்பு நடைமுறைகளை மேம்படுத்துதல் என்பன பெண்களுக்கு நிதி சுதந்திரத்தை அடையவும் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிக்கவும் உதவும். மகாபாரதத்தில் கூறுவது போல் எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடாத்தப்படுகின்றார்களோ அந்த இடத்தில் தேவதைகள் குடியிருக்கின்றார்கள்.

## சுகாதாரம்

இனப்பெருக்க சுகாதார சேவைகள் உட்பட, இலகுவாக அணுகக்கூடியதும் தரமான சுகாதார பாதுகாப்புகளின் அணுகல்களை உறுதி செய்வதும் பெண்களின் நல்வாழ்வுக்கும், அதிகாரமளித்தலுக்கும் அவசியமாகும். எடுத்துக்காட்டாக பாடசாலைகளில் பெண் பிள்ளைகளுக்கான சுகாதார அணுகல்களை உறுதி செய்தல்.

கடை மற்றும் சிறுவியாபாரங்களில் ஈடுபடும் பெண்களின் சுகாதார அணுகல்களை உறுதி செய்தல்.

பொதுப்போக்குவரத்து, பொது மலசலகூடங்களை அணுகுவதற்கான வசதிகளை உறுதி செய்தல்.

## விவசாயத்துறை

பெண்கள் தங்கள் சமூகத்தில் எழுந்து நிற்பதற்கு அவர்கள் ஒவ்வொரு துறையிலும் தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். எமது வீடுகளில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றார்கள். ஆனாலும் உற்பத்தி மூலங்கள், மூலதனம் மற்றும் அவர்களின் திறன்கள் அறிவுகளைப் பிரயோகிப்பதில் குறைந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளார்கள். பாலின உள்வாங்குதலினூடாக விவசாய உற்பத்தித் திறனை ஊக்குவித்து நிலைபேறான உணவுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் தமது உற்பத்தித் திறனில் அதிகளவு கவனம் செலுத்த முடியாமைக்கு அளவுக்கதிகமான பணிச்சுமை காரணமாகின்றது. பராமரிப்பு மற்றும் வீட்டுச் சுமைகள் சமனற்ற வகையில் பகிரப்படுவதால் அதிகளவு நேரத்தை அதற்கு எடுத்துக் கொள்கின்றார்கள். இதனால் குறைந்த திறன், குறைந்த கொடுப்பனவு என அவர்களின் பொருளாதார ஈட்டல்கள் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன.

விவசாயத்துறை தொழில் நுட்பங்கள் மற்றும் அவற்றைக் கையாளுதல் பற்றிய அறிவு மற்றும் திறனை வழங்கி பெண்கள் மற்றும் ஆண்கள் இணைந்து விவசாய உற்பத்தித் திறனை ஊக்குவிப்பது, பெண்களை விவசாயிகளாக ஏற்றுக்கொள்வது எமது கிராமிய மட்டத்தில் மலர்ச்சியையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

## வழிகாட்டல் திட்டங்கள்

அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகளுடன் பெண்களை இணைப்பது அவர்களுக்கு வழிகாட்டுதல், ஆதரவு மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்க முடியும். எடுத்துக்காட்டாக உதவி வழங்கும் நிறுவனங்கள் கள அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கும் திட்டங்களை அதிகரித்து பெண்களுக்கான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

தொடரும்...



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

சா.செல்வசிகாமணி, ஓய்வுநிலை அதிபர், மத்தியமுகாம்.

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

அன்பு வாசகர் உறவுகளை சந்திப்பதில் சிறியேன் மிகவும் மகிழ்வு கொள்கின்றேன்.

அன்பர்களுக்கு இம்மாத இதழில் இன்னும் ஒரு நாட்டுக்கூத்துக்கலைஞரைப்பற்றிய தகவல்களைத் தரலாம் என எண்ணுகின்றேன். இவர் நாட்டுக் கூத்துக்கலைஞர் மட்டுமல்ல அண்ணாவியாரும் ஆவார். அதுசரி நாவிதன்வெளிப் பிரதேசத்திற்கே ஒரே ஒருவர்தானே முடிசூடா மன்னராக வாழ்ந்தார். கலாபூசணம் அழகையா என்று முன்பு குறிப்பிட்டீர்களே பின்னர் இவர் என்ன? என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகின்றது. அவருக்கு அடுத்ததாக இருப்பது இவர் என்று குறிப்பிடலாம்.

எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தில் ஏழாம் கிராமம் 141ஆம் இலக்கம், அன்னமலை - 02 எனும் முகவரியில் இந்தக் கலைஞர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை ஒரு நண்பர் மூலம் தெரிந்து கொண்ட நான் என் எழுதுகோலுக்கு இரை கிடைத்து விட்டதே என்ற மகிழ்வோடு அவர் இல்லம் தேடிச்செல்கின்றேன்.

அன்னை கலைவாணியின் அருள் பெற்றவர்கள்தானே கலைஞர்களும் புலவர்களும். அதனால் திருமகளின் பார்வை இவர்களுக்கு குறைவாகத்தான் இருக்குமோ என்று தோன்றுகின்றது. இதை வைத்துத்தான் சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும் என்று கூறினார்கள் போலிருக்கின்றது.

அந்தக் கலைஞரின் வீடும் அவர் வாழும் சூழலும் அப்படித்தான் இருந்தது. ஆம் அந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்தான் திரு.வெள்ளக்குட்டி பொன்னையா அவர்கள். இவர் ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞராக, அண்ணாவியாராக இருந்து எமது நாட்டுப்புறக் கலைகளை கூத்துகள், கோலாட்டம், கரகம், காவடி எனப்பல்வேறு வடிவங்களில் கலை உலகுக்கு வெளிப்படுத்தி வருகிறார். 1953ஆம் ஆண்டு கல்ஓயா குடியேற்றத்திட்டக்

காலத்தில் சிறு பிள்ளையாக துறைநீலாவணையில் இருந்து தாய் தந்தையருடன் வந்து ஏழாம் கிராமத்தில் குடியமர்ந்திருக்கிறார். விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட இவர் கலையார்வமும் திறமையும் கொண்டமையினால் பதினைந்து நாட்டுக் கூத்துகளில் ஆடியிருக்கிறார். பின்னர் சில நாட்டுக் கூத்துக்களை இவரே இயக்கி அரங்கேற்றியும் இருக்கிறார். இளம் சிறார்களை வைத்தே இவர் நாட்டுக் கூத்துக்களை நடாத்தியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கது "கந்தன் திருவிளையாடல்" என்ற நாட்டுக்கூத்தாகும். இது பல இடங்களில் அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அது தவிர இவர் நவீன நாட்டுக் கூத்துக்கள் பலவற்றை இயக்கியிருக்கின்றார். 15ஆம் கிராமத்தைச் சேர்ந்த திரு சம்புநாதன் சின்னராசா அவர்களால் எழுதப்பட்ட சமூகக்கதைகள் சார்ந்த நவீன நாட்டுக்கூத்துகள் பலவற்றையும் இவர் அரங்கேற்றியிருக்கின்றார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை மணமகள், சீனியும் இனிப்பும் போன்ற நகைச்சுவைப்பாணியில் அமைந்த நவீன நாட்டுக் கூத்துக்களாகும். நவீன நாட்டுக்கூத்து எனப்படுவது பாரம்பரிய சமய இலக்கியங்கள் சாராத சமூகக்கதைகளைக் கொண்ட புதிய வடிவிலான கூத்துமுறை என்று கூறலாம்.

இவரது இக்கலைப் படைப்புக்களைப் பொது இடங்களிலும், கொட்டகை, மேடைகளிலும் சில சந்தர்ப்பங்களில் கோயில் விழாக்களிலும் அரங்கேற்றம் செய்துள்ளதாகக் குறிப்பிடப் படுகின்றது. மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த கூத்துக்களில் ஒன்றாக "கூலிக்குக் கட்டிய தாலி" என்ற நவீன நாட்டுக்கூத்து இன்றும் பேசப்படுகின்றதாக அறியமுடிகின்றது. இவரது இக்கலைச் சேவையைப் பாராட்டி பல நிறுவனங்களால் பரிசுகளும் கௌவிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளதோடு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டு முதல் கலைஞர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவும் மாதாமாதம் வழங்கப்பட்டு வருகின்றது. இவரது கலைப் படைப்புக்கள் பல இந்துக் கோயில்களில் மாத்திரமன்றி கௌத்தர்களின் பெரகரா நிகழ்வுகளிலும் இடம் பெறுவதுண்டு. பல இடங்களில் இருந்து இவரது கலைப் படைப்புக்களைக் கேட்டு அழைப்புகள் கிடைக்கும் போது இவர் தனது கலைக் குழுவினருடன் சென்று நிகழ்ச்சிகளை அரங்கேற்றி பல பாராட்டுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளார் என்று இவர் தொடர்பாகப் பேசும்போது ஒரு அன்பர் குறிப்பிட்டார்.

இவ்வாறாக எமது தமிழர்களின் பண்பாடுகளைக் கலை வடிவில் வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கும் அந்த உன்னத கலைஞரைச் சந்தித்து உரையாடி அவரது கலைச்சேவை தொடர்பாக வாசகர் உறவுகளுக்கு தெரியப்படுத்தக் கிடைத்தமையை நான் எனது பாக்கியமாகக்கருதுவதோடு "போற்றற்கரியோரைப் போற்றுவோம்" என்று கூறி 71 வயதினைப் பூர்த்தி செய்து தனது மூத்தமகனை ஓர் ஆசானாகவும், மூத்த மகளை பல்கலைக்கழகத்தில் கற்பவராகவும் ஆக்கிவிட்டுத் தன் மனைவி பிள்ளைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கலைஞர் இன்னும் பல்லாண்டு சுகதேகியாகவும் மனமகிழ்ச்சியோடும் வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போம்.



# AI –இடம் நீங்கள் கேட்கவே கூடாத கேள்விகள்...! 10 என்னென்ன தெரியுமா...?

ICT UNIT , DIVISIONAL SECRETARIAT, - NAVITHANVELI

செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence) நீங்கள் குறிப்பிட்ட வரம்புக்குள் பயன்படுத்துவது சிறந்தது. எனவே, எந்தெந்த மாதிரியான கேள்விகளை AI-யிடம் ஒருபோதும் கேட்கக்கூடாது என்பதை இப்போது தெரிந்து கொள்ளலாம்.

செயற்கை நுண்ணறிவு (AI) என்பது இன்று நம்முடைய அன்றாட வாழ்க்கையை மிகப்பெரிய அளவில் மாற்றி வருகிறது. மாணவர்கள், தொழில் முனைவோர் மற்றும் அன்றாட பயனர்களுக்கு வேலைகளை ஒழுங்கமைப்பதற்கு இது உதவுகிறது. ChatGPT, Grok மற்றும் Meta AI போன்ற தளங்கள் பல்வேறு விதமான கேள்விகளுக்கு உடனடி பதில்களை வழங்குகின்றன. அந்த பதில்கள் பெரும்பாலும் அதிக விரைவாக, வழக்கமான கூகுள் போன்ற பாரம்பரிய தேடு பொறிகளை விட மிக தனிப்பயனாக்கப்பட்ட (Personal-ized) பதில்களாக இருக்கின்றன.

ஆனால், AI-யிடம் நீங்கள் அனைத்து விதமான கேள்விகளையும் கேட்டுவிட முடியாது. ஒரு சில கேள்விகளுக்கு தவறான பதில்கள், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகளை மீறுதல் அல்லது தார்மீக பிரச்சினைகள் போன்றன ஏற்படலாம். செயற்கை நுண்ணறிவை நீங்கள் குறிப்பிட்ட வரம்புக்குள் பயன்படுத்துவது சிறந்தது. எனவே, எந்தெந்த மாதிரியான கேள்விகளை AI-யிடம் ஒருபோதும் கேட்கக்கூடாது என்பதை இப்போது தெரிந்து கொள்ளலாம்.

### 01. தனிப்பட்ட அல்லது உணர்வுப்பூர்வமான தகவல்கள்:

உதாரணம்: "என்னுடைய வங்கிக் கணக்கிற்கு என்ன கடவுச்சொல் வைக்கலாம்?" அல்லது "என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி ஒரு நம்பகமான தகவலை சொல்ல முடியுமா?"

ஏன் கேட்கக்கூடாது?
தனியுரிமை (Privacy) மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காரணமாக AI தனிப்பட்ட தகவல்களை கையாளக் கூடாது என்ற விதிமுறையின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

### 02. சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள் சம்பந்தமான கேள்விகள்:

உதாரணம்: "ஒரு நிகழ்நிலை முறைமையை (Online System) துருவுவது (Hacking) எப்படி?"

ஏன் கேட்கக்கூடாது?
AI என்பது ஒரு சில நெறிமுறைகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டது. எனவே, சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளுக்கு அது உங்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் வழங்காது.

### 03. மருத்துவ ரீதியான அல்லது சட்டரீதியான ஆலோசனைகள்:

உதாரணம்: "எனக்கு இந்த நோய் உள்ளது. அதற்கான சிகிச்சை என்ன?" அல்லது "இந்த வழக்கில் எனக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்."

ஏன் கேட்கக்கூடாது?
AI என்பது மருத்துவர் அல்லது வழக்கறிஞருக்கு ஒரு மாற்றீடு கிடையாது. எனவே, குறிப்பிட்ட மருத்துவ அல்லது சட்டரீதியான சிக்கல்களுக்கு நீங்கள் நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

### 04. நிச்சயமற்ற நிகழ்வுகளைப் பற்றிய கணிப்புகள்:

உதாரணம்: "2026இல் பங்கு சந்தை எப்படி செயல்படும்?"

ஏன் கேட்கக்கூடாது?
ஒருபோதும் எதிர்கால நிகழ்வுகளை AI-ஆல் துல்லியமாக கணிக்க முடியாது. ஏற்கனவே அதில் இருக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில் மட்டுமே AI-ஆல் உங்களுக்கு பதில்களை வழங்க முடியும்.

### 05. அப்டேட் செய்யப்படாத நிகழ்கால தகவல்கள்:

உதாரணம்: "இந்த நேரத்தில் கொழும்பில் வானிலை எப்படி இருக்கும்?"

ஏன் கேட்கக்கூடாது?
AI-யிடம் நிகழ்கால தகவல்கள் பற்றிய மிகக் குறைவான தகவல்களே இருக்கும். எனவே, இந்த மாதிரியான விடயங்களுக்கு வானிலை சார்ந்த செயலிகள் அல்லது செய்தி மூலங்களை காண்பது புத்திசாலித்தனமாக இருக்கும்.

### 06. சிக்கலான அல்லது தெளிவற்ற கேள்விகள்:

உதாரணம்: "வாழ்க்கை என்பதன் அர்த்தம் என்ன?"

ஏன் கேட்கக்கூடாது?
தத்துவ ரீதியான கேள்விகள் நபருக்கு நபர் மாறுபடும். எனவே, AI-ஆல் உங்களுடைய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியாது.

### 07. தவறான அல்லது பக்க சார்புடைய அனுமானங்கள்:

உதாரணம்:
"இந்த குறிப்பிட்ட குழு/கட்சி ஏன் எப்பொழுதும் தவறாகவே இருக்கிறது?"

ஏன் கேட்கக்கூடாது?
இது மாதிரியான கேள்விகள் பாரபட்சத்தை ஊக்குவிக்கலாம். AI எப்பொழுதும் நிரூபிக்கப்பட்ட உண்மை அடிப்படையிலான பதில்களை மட்டுமே கொடுக்கும்.

### 08. நெறிமுறையற்ற அல்லது தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்ட கேள்விகள்:

உதாரணம்:
"ஒருவருக்கு தீங்கு விளைவிப்பதற்கான சிறந்த வழி என்ன?"

ஏன் கேட்கக்கூடாது?
AI தார்மீக நெறிமுறைகளை பின்பற்றி வடிவமைக்கப்பட்டிருப்பதால் தீங்கு விளைவிக்கும் நோக்கங்களுக்கு ஒருபோதும் AI துணை புரியாது.

### 09. அதிக தொழில்நுட்ப ரீதியான அல்லது நிபுணத்துவம் அடிப்படையிலான கேள்விகள்

உதாரணம்: "Quantum cryptography"க்கு கோட் எழுதுவது எப்படி?"

ஏன் கேட்கக்கூடாது?
அதிக தொழில்நுட்பம் சார்ந்த கேள்விகளுக்கு நிபுணர்களின் அறிவுத்திறன் மற்றும் அனுபவம் தேவைப்படுகிறது. இதனை AI-ஆல் கொடுக்க முடியாது.

### 10. AI எப்படி இயங்குகிறது? அல்லது அதன் தரவுகள் சம்பந்தப்பட்ட கேள்விகள்:


உதாரணம்:
"உன்னுடைய தரவு கட்டமைப்பில் (Data Set) என்ன இருக்கிறது?" அல்லது "உன்னுடைய Algorithm எப்படி இயங்குகிறது?"

ஏன் கேட்கக்கூடாது?
AI மாடல்களின் உட்புற செயல்பாடுகள் என்பது சிக்கலானது. இது வழக்கமான பயனருக்கு பொதுவாக பயனுள்ளதாக இருக்காது. இந்த வரம்புகளை புரிந்து கொள்வது தொழில்நுட்பத்தை மிகவும் பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதற்கு உதவும்.

தொகுப்பு:
டி. ஜாசுகி



# கணினி கல்விக்கூடம்
# எமது சிறுவர்களுக்கான விளையாட்டு



# குறுக்கெழுத்துப் போட்டி இல.18 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | வி | வ | 2 ழி | ■ | 3 வா | 4 த் | 5 து |
| வ் | ■ | ■ | க | ■ | 6 கு | த | தி |
| 7 வா | னி | 8 லை | அ | 9 றி | க் | கை | ■ |
| ய் | ■ | னி | ■ | ன் | ■ | 10 கு | 11 ப |
| ■ | 12 க | ன் | 13 மு | ப | 14 ம் | ■ | ம் |
| ■ | 15 டு | மு | க | ■ | 16 ம | 17 த | ம் |
| 18 சை | க | ■ | 19 ப் | ம் | ரு | ப | வி |
| 20 ப | தி | ■ | பு | ■ | 21 க | வி | ■ |

## வெற்றியாளர்

திருமதி. G. மணிவண்ணன்
அன்னமலை - 01

## பாராட்டு பெறுவோர்

திருமதி. R. பிரியதர்ஷன்
பாண்டிருப்பு-01

RELOAD
1ST 200/=
2ND 150/=
3RD 100/=

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 19

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | 5 | | 6 |
| | ■ | 7 | | | | ■ | |
| 8 | | | | ■ | 9 | | |
| | ■ | | ■ | 10 | | ■ | |
| 11 | 12 | | 13 | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | | | ■ | 16 | 17 |
| 18 | | | ■ | ■ | ■ | 19 | |
| 20 | | ■ | 21 | | | | ■ |

## இடமிருந்து வலம்

01. பிரச்சினைகளை இதன் மூலமும் தீர்த்துக் கொள்ள முடியுமாம்.
07. மந்திரித்து கட்டப்படுவது (குழம்பி).
08. மகாபாரதத்தில் முக்கிய பாத்திரமொன்று.
09. நம்பிக்கை என்றும் சொல்லலாம்.
10. இருந்து என்று தொடங்கினால் முடிவது.
11.வெளியில் உள்ள இடம்/அரங்கு (குழம்பி).
15. வருத்தம் வந்தால் இதை எடுப்பார்கள் (குழம்பி).
16. பிரணவ மந்திரம் (திரும்பி).
18. தோட்டத்தில் இதைக் கட்டுவர்.
19. இந்து ஆலயங்களில் இது முக்கியமானது.
20. தானியம் ஒன்று (திரும்பி).
21. முதிர்வுக்கு முன் நடந்துவிடுவது.

## மேலிருந்து கீழ்

01. வீரத்தனம்.
02. மாலையாகும் போது மலரும் மலர். (குழம்பி).
03. துன்பம் என்று சொல்லலாம்.
04. பிரிட்டிஷ் காலத்தில் பெயர் பெற்ற ஒன்று (தலைகீழ்).
05. தலங்களுக்கு இப்படிச் செல்வோர் பலர்.
06. அணிகலன் ஒன்று (தலைகீழ்).
10. பக்கங்களில் ஒன்று.
12. துணி வகை ஒன்று.
13. அம்மா மம்மியாகியது மட்டுமல்ல இப்போது இதுவுமாகிவிட்டது (தலைகீழ்).
14. கௌரவமாக அழைக்கும் பெயர்.
17. நீர் வழிந்தோடும் இடம் ஒன்று.
18. பாத்திரம் ஒன்று.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.08.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# காணிச்சட்டம்

NMM A.Sujan, Colonization Officer



# அரச காணி ஆவணங்களும் அடுத்துரிமை நியமனமும்

## பெயரிடுதலை இரத்துச் செய்தல்

அடுத்துறுபவராக பெயரிடப்பட்டதானது, உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் மூலம் எந்தவொரு வேளையிலும் இந்தப் பெயரிடலை இரத்துச் செய்ய முடியும்.

## மீண்டும் பெயரிடல்

இரத்துச் செய்யப்பட்ட பெயரிடலுக்காக காணித்துண்டின் உரிமையாளர் மூலம் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் மூலம் வேறு பெயரிடாமல் செய்ய முடியும். அடுத்துறுபவராக முன்னர் பெயரிடப்பட்டவர் அல்லது பெயரிட்டதை இரத்துச் செய்யும்போது அவ்விடயத்தை கவனத்திற் கொள்ளாது மீண்டும் அவரை அடுத்துறுபவராக பெயரிட முடியும்.

## பெயரிடப்பட்ட காணி கையுதிர்க்க முடியாது

அடுத்துறுபவராக யாராவது நபர் இந்த அத்தியாயத்தின் கீழ் சட்டத்திற்கு உட்பட்டு பெயரிடும் நடவடிக்கை இல்லையாயின் பரிமாற்றம் அக்காணி கையுதிர்த்ததாக முடியாததோடு அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் முடியாது.

## பெயரிடும் முறை

(1) அடுத்துறுபவராக அடுத்துறுபவரைப் பெயரிடல் மற்றும் அப் பெயரிடலை இரத்துச் செய்தல் மூன்று பிரதிகளில் குறித்த படிவத்தின்படி தயாரித்து அரசாங்க அதிபர் அல்லது காணி பதிவுசெய்யும் பதிவாளர் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது நொத்தாரிசு ஒருவர் அல்லது சமாதான நீதவான் முன்பாக சாட்சியுடன் கையொப்பமிட்டு ஆவணமாக்கப்பட வேண்டும்.

(2) முதலாவது உப பிரிவில் குறிப்பிட்ட நடைமுறைகள் இங்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு இறுதி விருப்பமாகச் செய்த அடுத்துறுபவருக்கு பெயரிடல் அல்லது அவ்வாறு பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பாக 87வது பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரம் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணிக்கு அடுத்துறுபவராகப் பெயரிடல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பாக பொருத்தமற்றதாகும்.

(3) முதலாவது உப பிரிபிவின்கீழ் அடுத்துறுபவருக்காகப் பெயரிடல் அல்லது அப் பெயரிடலை இரத்துச் செய்தல் ஆவணங்களைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்திற்குரிய பணிக்காக காணி தொடர்பான ஆவணமாக எடுக்கக் கூடாது. அவ்வாறான ஆவணம் யாருக்கு முன் கையொப்பமிடப்பட்டதோ அவர்கள் அந்த கட்டளைச் சட்டத்தின் IIஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள

நடைமுறைகளுக்குக் கீழ் வரக்கூடாது.

பெயரிடப்படுதலுக்கு அல்லது பெயரிடலை இரத்து செய்வதற்கு முத்திரைக் கட்டணம் செலுத்தக் கூடாது. அடுத்துறுபவரைப் பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பாக ஆவணம் எழுதி கையொப்பமிடும்போது அதற்காக எதுவித முத்திரைக் கட்டணமும் அறவிடவோ பெற்றுக் கொள்ளவோ முடியாது.

பெயரிடல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பாக ஆவணம் பதிவு செய்யப்படாது விட்டால் அது இரத்தாகும்

1) அடுத்துறுபவரைப் பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பான (இறுதி விருப்பாவணம் தவிர்ந்த) ஆவணம், அந்த ஆவணம் தொடர்பான காணி அல்லது காணித்துண்டு அமைந்துள்ள மாவட்டத்தின் காணி பதிவுசெய்வது தொடர்பான பதிவாளர் மூலம் பதிவு செய்யப்படும்வரை செல்லுபடியற்றதாகும்.

(2) அடுத்துறுபவரைப் பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பான ஆவணம் பதிவு செய்வதற்காக வைக்கப்பட வேண்டிய புத்தகம் மற்றும் அவ்வாறு பதிவு செய்வதற்காக அறவிட வேண்டிய கட்டணம் உட்பட அது சம்பந்தமான மற்றும் தொடர் நடவடிக்கைகளான சகல விடயங்கள் தொடர்பாகப் பயன்படுத்த வேண்டிய நடைமுறைகளைக் காட்டும் ஒழுங்கு விதிகளை விடுக்க முடியும்.

## ஆவணத்தைப் பரிசீலனை செய்யும் போது மக்களுக்குள்ள உரிமை

குறித்த கட்டணத்தைச் செலுத்தும் எவருக்கும் இக் கட்டளைச் சட்டத்தின் 58ஆவது பிரிவின் கீழ் காணியைப் பதிவு செய்து பதிவாளர் வைத்திருக்கும் புத்தகத்தை அவரின் அலுவலகத்திலேயே பரிசீலனை செய்யும்



அதிகாரம் உள்ளது.

பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் உரிமையாளரின் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் மரணத்திற்கு முன்பு பதிவு செய்யாது விடின் செல்லுபடியற்றதாகும்.

அடுத்துறுபவரை பெயரிடல் அல்லது அப் பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பாக (இறுதி விருப்பாவணம் தவிர்ந்த) ஆவணம் காணித்துண்டு உரிமையாளரின் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் மரணம் ஏற்படும் திகதிக்கு முன்பு குறித்தபடி பதிவு செய்யாதுவிடின் அப் பெயரிடல் அல்லது இரத்துச் செய்தல் செல்லுபடியற்றதாகும்.

பெயரிடப்பட்டவரின் இறப்பினால் பெயரிடல் இரத்தாகும் காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப் பத்திரக்காரர் மூலம் அக்காணிக்கு அல்லது காணித் துண்டுக்கு பெயரிடப்பட்ட யாராவது அடுத்துறுபவர் காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப் பத்திரகாரரின் சீவிய காலத்தினுள் இறந்தால் அடுத்துறுபவராக அவரின் நியமனம் இரத்தாவதற்கு அவ் விடயமே காரணமாகும்.

# தோமஸ்சங்காரா ஆரம்பித்ததை இப்ராஹிம்ரோரே முடித்து வைப்பாரா?

# ஆபிரிக்காவில் தென்படும் விடிவெள்ளி



உலக நாடுகளைத் தமது காலனித்துவத்தின் கீழ் அடிமைப்படுத்திய மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இரண்டு வகையாக இந் நாடுகளைப் பிரித்தாளுகின்றார்கள். அதில் அரேபிய நாடுகள் யாவும் தீவிரவாத நாடுகள் என்றும், மற்றைய ஆபிரிக்க நாடுகள் பிச்சைக்கார நாடுகள் என்ற மாயையை உருவாக்கி வைத்துள்ளனர். இந்தவகையில் ஆபிரிக்காவில் செல்வ வளம் பொருந்திய ஆனால், வறுமை விட்டொழியாத ஒரு நாடு பர்க்கினா பாசோ (Burkina Faso) என்பதாகும். கடல்வழி இல்லாத முழுக்க முழுக்க நிலத்தை நம்பி இருக்கின்ற நாடாகும். இரண்டு கோடி மக்கள் தொகையைக் கொண்டதாகும். இங்கு ஆபிரிக்க வட்டார மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் ஆட்சி மொழியாக பிரெஞ்சு மொழி உள்ளது. 1896இல் பிரான்ஸ் நாடானது இந்நாட்டில் தனது காலனித்துவத்திற்குள் கீழ் ஆட்சிசெய்து 1956ஆம் ஆண்டில் சுதந்திரம் வழங்கியது. ஆனால் அடிமைச்சாசனம் கிழித்தெறியப்படாததால் பிரான்ஸின் முதலாளித்துவ ஆதிக்கம் பர்க்கினா பாசோ நாட்டின் மீது மிகுந்த செல்வாக்கினை செலுத்தி வந்தது. இன்று வரைக்கும் மிகுந்த வறுமையில் உள்ள நாடாக இருப்பதற்கு காரணமாக இந்நாட்டின் மக்கள் தொழிலாளிகளாகவும், மேற்கத்தேய பிரான்ஸ் நாட்டினர் மட்டுமே முதலாளிகளாகவும் இருக்கின்றமை இங்குள்ள பிரச்சினையான விடயமாகும்.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான ஆட்சியாளர்கள்தான் அங்கு ஆட்சி அமைத்து நாட்டின் சுரண்டலுக்கு ஒத்துழைத்தனர். இவ்வாறான நிலையில் 1983ஆம் ஆண்டின் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் நாட்டினை மீட்டெடுத்தார் தோமஸ் சங்காரா எனும் இராணுவ வீரர். நாட்டின் தற்போதைய பெயரை இட்டவரும் இவர்தான். நாட்டிலுள்ள தீவிரவாத, கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினார். பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்தார். மக்களுடைய வறுமையைப் போக்க பல்வேறு பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்தார். நாடுமுழுக்க மரங்களை நட்டார். மக்களின் வாழ்க்கைத்தரமும் சற்றே உயர்வடைய நாட்டுமக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்தார். இது பிரான்ஸ் நாட்டிற்கும், மேற்குலக நாடுகளுக்கும் பெரும்தலையிடியாய் இருந்தது. இந்நிலையில் பிரான்ஸின் சதி முயற்சியால் 1987 ஐப்பசி 15ஆந் திகதி தோமஸ்சங்காரா தனது நெருங்கிய நண்பரால் படுகொலை செய்யப்பட்டார்.

ஆபிரிக்காவின் சேகுவாரா என்ற பட்டத்துடன் தோமஸ்சங்காராவின் கொள்கைகள், சிந்தனைகள் பொருளாதாரத் திட்டங்கள் உயிரோடு உலாவின. இவ்வாறு ஒரு வருடத்தின் பின் 1987ஆம் ஆண்டு பர்க்கினா பாசோ பொர்ட்டோகுயின் நகரின் இப்றாஹிம்ரோரே பிறந்தார். அவரது சொந்த ஊரில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் 2006ஆம் ஆண்டு ஓவாபட்டோவா பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி புவியியல் துறை பட்டப்படிப்பினை தொடர்ந்தார். 2009இல் பட்டப்படிப்பை நிறைவு செய்து இராணுவத்தில் சாதாரண வீரராக இணைந்தார். அங்கு தனது திறமையை வெளிப்படுத்தி இராணுவ உயர் அதிகாரிகளை கவர்ந்தார். பின்னர் மொரோக்கோ நாட்டிற்கு விமானப்படைப் பயிற்சி பெறச்சென்றார். அங்கு திறமைகளை வெளிப்படுத்தி லெப்டினன்ட் பதவிக்கு உயர்த்தப்பட்டார். பின்னர் 2018ஆம் ஆண்டு ஐ.நாவின் அமைதிகாக்கும் படையில் இணைந்து பணியாற்றினார். இக் கால கட்டத்தில் தனது நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கினார். இதன் பொருட்டு இப்ராஹிம்ரோரேவுக்கு கெப்டன் தர பதவி உயர்வு வழங்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் இறுதிப்பகுதியில் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை தோன்றியது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டனர். இந்நிலையில் டமியா எனும் புரட்சியாளர் தலைமையில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு ஆட்சி கைமாறியது. இவரால் நீண்டகாலம் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளமுடியவில்லை. ஏகாதிபத்திய வாதிகளின் தேவையையும் தனது சுயதேவையையும் அவர் நிறைவேற்றினார். இந்நிலையில்தான் இப்றாஹிம்



ரோரே தலைமையில் இராணுவக் குழு உருவாக்கப்பட்டு டமியோவிடமிருந்து ஆட்சி பிடுங்கப்பட்டது. 2022.09.30ஆந் திகதி தனது 34வது வயதில் வர்க்கினோ போசோவின் அதிபராக பதவியேற்று முழு ஆபிரிக்காவுக்கான விடிவெள்ளியாக மிளிரத் தொடங்கினார்.

மேற்குலக வாதிகள் வியந்து பார்த்தனர. இவரின் கொள்கைகள், சிந்தனைகள் பொருளாதார திட்டங்கள் ஆபிரிக்க மக்களை வெகுவாக கவர்ந்தது. பொதுவாக இராணுவ ஆட்சியை மக்கள் விரும்புவதில்லை. ஆனால் இவரது ஆட்சியை மக்கள் ஏற்றுக்கொண்டனர். தோமஸ்சங்காரா ஆரம்பித்ததை இப்றாஹிம் ரோரே முடித்துவைப்பார் என்று மக்கள் நம்பினார்கள். பிரான்ஸ் படைகள், அமெரிக்க படைகளைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றினார். பிரான்ஸ் இனிமேல் எங்களது வளங்களைச் சுரண்ட முடியாது என்று நேருக்கு நேராக அறிவித்தார். மேற்குலகத்தினை நேரடியாக எதிர்த்து கருத்துகளை வெளியிட்டார். எமது நாட்டில் மட்டுமல்ல முழு ஆபிரிக்காவிலுமுள்ள வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பரந்த விரிந்த சிந்தனையை தெரிவித்து மற்ற ஆபிரிக்க நாடுகளையும் விழிப்படையச் செய்தார். ஐக்கிய ஆபிரிக்க வல்லரசை உருவாக்கப்போகின்றோம் என்று சூளுரைத்தார். கொஞ்சம் கொஞ்சமாக இவரது கருத்துகள் ஆபிரிக்கா முழுவதும் பரவி ஒற்றுமையின் தேவையை வலுப்படுத்தின. இதனுடைய தாக்கம் பக்கத்து நாடான மாலியிலும் பரவியது. 2021ஆம் ஆண்டு மாலியிலும் இராணுவப் புரட்சி மூலம் அசீம் சொய்டா ஆட்சி செய்துகொண்டிருந்தார். இவர் இப்றாஹிம் ரொரேவுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கினார். மாலியிலிருந்து பிரான்ஸ் படைகள் உடனடியாக வெளியேற்றப்பட்டன இதன் பின்னர் அடுத்த பக்கத்து நாடான நைஜர் என்ற நாட்டிலும் இவரது சிந்தனைகள் விழிப்புணர்வு கருத்துக்கள் மாற்றத்தை ஏற்படுத்தின. அங்கு பிரான்ஸின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. அங்கு யுரேனியம் மிகுந்த வளமாகக் காணப்படுகின்றது. அங்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சுரண்டல்களுக்கு பல தடங்கல்கள் ஏற்பட்டன. நைஜர் நாட்டின் ஜனாதிபதி முகம்மட் நைஜூத் மேற்கத்தேய கைக்கூலியாகவே இருந்தார். இவருக்கெதிராக இராணுவப் புரட்சி மூலம் விரட்டப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டு பிரான்ஸியப் படைகள் வெளியேற்றப்பட்டன. இந் நிலையில் இப்ராஹிம் ரோரேயினுடைய பலம் அதிகரித்து பக்கத்து இரு நாடுகளும் கைகோர்த்தன. இம் மூவரும் சேர்ந்து ஆபிரிக்காவின் கனிய வளங்களைச் சுரண்ட விடமாட்டேம் என அறிக்கை விட்டனர். ஆபிரிக்காவின் இந்தப் புதிய நம்பிக்கைப் பலம் காரணமாக மேற்குலகம் தூர இருந்து பார்த்து யோசித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அசைக்க முடியாத ஆபிரிக்க மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இப்ராஹிம் ரோரே உருவாகி வருகின்றார். இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும் அவரது சகல நடவடிக்கைகளும் நாட்டு மக்களின் நலன், நாட்டின் அபிவிருத்தி, அந்நியரின் தலையீட்டினைத் தடுத்தல், வளச் சுரண்டல்களைத் தடுத்தல் என்பன போன்ற தூர நோக்குடனான செயற்பாடுகள்தான். தான் ஜனாதிபதி ஆனாலும் அதற்குரிய 74,000 டொலர் சம்பளத்தினைப் பெறாமல் கப்டன் தர சம்பளமான 600 டொலர் மட்டுமே சம்பளமாகப் பெற்று வருகின்றார். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றை தனது நாட்டிலிருந்து ஒதுங்கச்செய்து அமெரிக்கா, மேற்குலகம் சம்பந்தப்பட்ட எந்த நிறுவனங்களையும் நாட்டிற்குள் வரவிடாது தடுத்துவிட்டார். பின்னர் ரஸ்யாவிடம் சென்று எங்களுக்கு ஆயுத உதவி வேண்டாம் என்று கூறி தனது நாட்டு மக்களின் கல்வி அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவி, பொருளாதார அபிவிருத்திக்குரிய உட்கட்டமைப்புகளை உருவாக்கித் தருமாறு கோரி நிற்கின்றார். உண்மையிலேயே பத்து வருட கால எல்லைக்குள் தனது நாட்டினை வளப்படுத்த துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும் இவர் பதவியேற்று இரண்டு வருடங்களுக்குள் தனக்கெதிராக 16 தடவைகள் ஏற்பட்ட இராணுவப் புரட்சியினை அடக்கியிருக்கின்றார். 22 தடவைகள் தன்னைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளிலிருந்து தப்பியிருக்கின்றார். ஆபிரிக்க தேசத்தின் மக்களது முழுப் பிரார்த்தனையும் இவரைப்பற்றி இருப்பதால் நிச்சயம் இவரால் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை உருவாகியிருக்கின்றது.

*ஆக்கமும் தேடலும்*
*- கியோ*

# Celebrating 125 Glorious Years of Carmel Fatima College: A Beacon of Excellence and Inspiration




In a world where education is the cornerstone of societal progress, few institutions can claim a legacy as rich and impactful as Carmel Fatima College. As the most leading school in the city of Kalmunai, Carmel Fatima College celebrates a monumental milestone this year-125 glorious years of unwavering commitment to academic excellence, moral values and societal service. Founded by Catholic missionaries in the spirit of service and enlightenment, the college has remained a symbol of light, aptly captured in its Latin motto, "Luceat", meaning "Let it shine" or "May it shine."

This milestone is not just a celebration of longevity but of enduring quality, dedication and visionary leadership that has made Carmel Fatima College a cornerstone of our city's educational landscape. The school has been a guiding light for generations, nurturing minds and shaping futures with purpose, passion and compassion.

## A Heritage Rooted in Missionary Vision

Established in the year 1900 by Catholic missionaries, Carmel Fatima College was built on the foundational values of faith, service and enlightenment. From its earliest days, the college was envisioned as more than just a place of academic learning. It was designed to be a sanctuary where young minds could be nurtured to think critically, act justly and lead lives of purpose and integrity. The visionaries behind the institution believed that education must transcend barriers-be it caste, creed or ethnicity-and must be made accessible to all. This inclusive philosophy remains a guiding principle to this day.

## Lighting the Lamp of Knowledge Across Generations

From its humble beginnings, the college has grown into a sprawling institution that offers quality education from primary level to advanced academic pursuits. Over the years, Carmel Fatima College has educated thousands of students, many of whom have gone on to become prominent scientists, engineers, doctors, lawyers, accountants, teachers, business leaders, entrepreneurs and other respected professionals across the globe.

The impact of the college extends far beyond classroom walls. It has consistently emphasized holistic development, integrating personality development programs, co-curricular activities and value-based learning into its curriculum. This has enabled students to develop not only intellectually but also emotionally, socially and ethically-creating not just successful professionals, but responsible and empathetic citizens.

## A Nationally Acclaimed Institution

The excellence of Carmel Fatima College has not gone unnoticed. It holds a distinguished reputation at the national level for academic rigor, community engagement and character-building initiatives. Its alumni network, spread across various parts of the world, stands as a testament to the college's far-reaching influence and the lifelong impact it has on its students.

The institution has always remained at the forefront of educational innovation, regularly upgrading its teaching methodologies, technological infrastructure and faculty development to match global standards. Its enduring commitment to equity in education-offering learning opportunities to students from diverse socio-economic, cultural and religious backgrounds-has made it a truly inclusive and transformative space.

The college's leadership, staff, alumni and students share a common vision of growth and excellence. They understand the responsibility of shaping future citizens who will lead with knowledge, compassion and a sense of justice. The journey ahead includes expanding educational opportunities, integrating advanced technologies, promoting research and innovation and continuing to serve the underserved.

## A Place Where Every Student is Empowered to Shine

In keeping with its motto Luceat, Carmel Fatima College continues to be a place where every student is encouraged to shine. This is not just through academic excellence, but also by discovering and nurturing their unique talents and interests. Whether it's in the sciences, arts, humanities or sports, the institution has created an environment that empowers students to find their voice, pursue their passions and build a better future.

The school's emphasis on 21st-century skills-such as critical thinking, digital literacy, environmental awareness, emotional intelligence and global citizenship-has helped prepare students for the complex, fast-changing world they are stepping into. In a time when the world is facing unprecedented challenges, the role of institutions like Carmel Fatima College has become more important than ever.

## Celebrating the Past, Envisioning the Future

As we commemorate this 125-year journey, we not only celebrate the past but also look ahead with great hope and ambition. Carmel Fatima College's enduring success is a reflection of its ability to evolve while staying true to its core values. The institution has never rested on its laurels and continues to set new benchmarks in education, character formation and societal engagement.

## A Message of Gratitude and Encouragement

On this momentous occasion, we extend our heartfelt congratulations to Carmel Fatima College-for its unparalleled service to education, society and humanity. We honour the visionaries who laid its foundations, the educators who have dedicated their lives to teaching, and the countless students who have walked through its gates and gone on to make a mark in the world.

Let this anniversary be a reminder of the tremendous power of education when it is guided by purpose and principles. May Carmel Fatima College continue to be a lighthouse for future generations, steadfast in its mission to educate, inspire and transform lives! Let the motto "Luceat" continue to guide every step of its journey-Let it shine, now and always.

As Carmel Fatima College celebrates 125 years of illuminating minds and shaping futures, we salute its legacy with pride and admiration. In an era of rapid change and complex challenges, institutions like this remind us that true education is not just about preparing for exams, but about preparing for life. May this institution continue to grow in strength and spirit, ever faithful to its founding ideals and ever forward-looking in its mission! Congratulations to Carmel Fatima College! Shine on!

By:
Balasingham Sajindren
Pandiruppu



# யார் காரணம் ? வளிமண்டலம் மாசடைதல்

செல்வி. திருச்செல்வம் தர்க்ஷினி, கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நாவிதன்வெளி

'வளி" என்கின்ற சொற்பதம் பெரும்பாலான மக்களுக்கு பரீட்சயம் இல்லாத ஒன்று. எமது அன்றாட வாழ்வில் காற்று என்கின்ற சொற்பதமே பெருமளவில் பயன்படுத்துகின்றது. பஞ்ச பூதங்களில் ஒன்றாக விளங்கும் காற்றின் முக்கியத்துவத்தினை அறியாதவர் இப்புவியில் எவரும் இருக்க முடியாது. காரணம் வளி(காற்று) இல்லாமல் எந்த உயிரினமும் இவ்வுலகில் வாழ முடியாது. இதனால்தான் ஆனி 15ஆம் திகதி உலக காற்று தினம் கொண்டாடப்படுகின்றது. வளிமண்டலத்தில் பல்வேறுபட்ட வாயுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒட்சிசன்($O_2$), காபனீரொட்சைட்டு($CO_2$), நைதரசன்(N) போன்ற வாயுக்களை முதன்மையாகப் பட்டியற்படுத்தலாம்.

நாம் சுவாசிப்பதற்கு ஒட்சிசன்($O_2$) வாயு அவசியமாகின்றது. தாவரங்கள் ஒளித்தொகுப்பின் போது சூழலிலுள்ள காபனீரொட்சைட்டு($CO_2$) வாயுவினை உள்ளெடுத்து ஒட்சிசன்($O_2$) வாயுவினை வெளியிடுகின்றன. இதனையே நாம் சுவாசத்தின் போது உள்ளெடுக்கின்றோம். சுவாசிக்க சிரமப்படும் நோயாளிகளுக்கு வைத்தியசாலையில் செயற்கை முறையில் ஒட்சிசன் வழங்கப்படுவது நாம் அனைவரும் அறிந்த விடயமே! நாற்பது சதவீதமான(40%) ஒட்சிசன்($O_2$) எம்மைச் சூழவுள்ள தாவரங்களின் ஒளித்தொகுப்பின் மூலம் வெளிவிடப்படுகின்றது. மிகுதி அறுபது சதவீதமான(60%) ஒட்சிசன் எங்கிருந்து கிடைக்கப் பெறுகின்றது. சற்று சிந்தித்துப் பார்ப்போம்! சமுத்திரத்திலுள்ள தாவரங்கள் பாசிகள் மற்றும் பைட்டோபிளாங்க்டன்கள் (Phytoplankton) சூரிய ஒளியைப் பயன்படுத்தி ஒளிச்சேர்க்கையின் போது ஒட்சிசன்($O_2$) வாயுவினை வெளியிடுகின்றன. இதனையே கடல் வாழ் உயிரினங்கள் சுவாசிக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் மனித சமூகம் மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் மிகப் பெரும் சவாலாக வளிமண்டலம் மாசடைதல் விளங்குகின்றது. மனிதன் உயிர் வாழ அத்தியாவசியமான வளியினை மாசுபடுத்துவது மனிதனே! காரணம் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்களே வளியினை மாசுபடுத்துகின்றன. இதனை விரிவாக ஆராயலாம்.

வாயுக்களின் வீதம் மாறாத வகையில் வளிமண்டலம் அவற்றைப் பேணுகின்றது. ஆனால் இயற்கையின் சமநிலை குழம்புவதற்கு அதிகரித்து வரும் உலக சனத்தொகையும், அதனுடன் தொடர்பான தொழிற்சாலை மயமாக்கல், வீடமைப்பு குடியேற்றத் திட்டங்கள், அதிகரித்துவரும் வாகனப் பயன்பாடு, அனல் மின்சார நிலையங்கள், அணு உலைகள் சுரங்கங்கள் போன்ற இடங்களில் இருந்து வெளியேறும் நச்சுப்புகை மற்றும் சாம்பல்கள் அதிகளவில் காரணமாகின்றன. அதாவது வாகனங்களில் இருந்து வெளியேறும் காபனீரொட்சைட் வாயு, அனல்மின்

நிலையங்களில் எரிக்கப்படும் நிலக்கரியால் உருவாகும் சல கந்தகவீரொட்சைட் போன்ற வாயுக்கள், குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து வெளியேறும் குளோரோ புளோரோ காபன் வாயுக்கள், பிளாஸ்ரிக் பொருள்களை எரிக்கும் போது வெளி விடப்படும் புகை, கல் உடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும் சீமெந்து தொழிற்சாலைகள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் அதிக தூசுக்கள் போன்றவற்றைக் கூறலாம்.

இவ்வாறு வளி மாசடைதலை மனித குலம் துளியளவும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இதனால் ஆரோக்கிய ரீதியில் மனித குலம் எதிர் கொள்ளும் பாரதூரமும், தாக்கங்களும் ஏராளமானவை. புவியில் வாழும் உயிரினங்களை, சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் (UV Rays) தாக்கத்திலிருந்து காப்பது ஓசோன் படலம். நாம் பயன்படுத்தும் குளிர்சாதனப்பெட்டி (Refrigerator), காற்று பதனாக்கி (AC), காற்று குளிர்விப்பான் (Air Cooler) போன்றவற்றிலிருந்தும், தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றப்படுகின்ற புகையிலிருந்தும் குளோரோ புளோரோ காபன்(CFC) போன்ற நச்சுத் தன்மையான வாயுக்கள் ஓசோன் படலத்தில் ஓட்டையை ஏற்படுத்துகின்றன. இதனால் சூரியனில் நச்சுக் கதிர்கள் பூமியை அடைந்து மனிதர்களுக்கு தோல் புற்றுநோய், கண் சம்பந்தமான நோய் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன.

வளிமண்டலம் அதிகளவு மாசடைந்த பிரதேசங்களில் வாழ்கின்ற கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், நிறை குறைந்த குழந்தை பிறப்பு, குழந்தை இறந்து பிறத்தல், குழந்தை பிறந்த பின்பு சிறிது காலத்தில் இறத்தல் போன்ற பாரிய சவால்களை எதிர்கொள்கின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் சுவாசத்தின் போது உள்ளெடுக்கும் வளியில் நச்சு வாயுக்கள் கலந்திருப்பதாகும். புகைப்பிடிப்பவர்கள் வெளிவிடும் புகையினை சுவாசிக்கின்ற போது வயோதிபர்கள், சிறு பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் போன்றோரே அதிகளவான பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். சுவாசத் தொகுதி தொடர்பான நோய்கள் ஏற்படுவதுடன் கருப்பையில் வளரும் சிசுக்கள் கூட இதன் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் வளி மாசடைவினால் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. அவற்றுள் நுரையீரல் புற்றுநோய், நுரையீரல் நோய் தொற்று, கண் எரிச்சல், தலைவலி, தொண்டை எரிச்சல் மற்றும் புற்றுநோய் போன்றவை குறிப்பிட்டுக் கூறக்கூடியவை.

வளிமண்டலம் மாசடைவதனை முற்றாக தடுக்க முடியாது. இருப்பினும் அதன் பாதிப்பினை குறைப்பதற்கான வழிமுறைகளைக் கைக்கொள்ளலாம்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் தரமான எரிபொருளைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப்புகையைக் குறைக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதோடு புகைப் போக்கிகளை உயர்த்த வேண்டும். அத்துடன் வடிப்பான்களையும் பயன்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் பொருள்களை எரிக்காது மீள்சுழற்சி செய்வதற்கு ஒப்படைக்க வேண்டும். வெடிப் பொருள்கள், பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்க வேண்டும். மரங்களை வெட்டுவதைத் தவிர்த்து புதிதாக மரங்களை நட வேண்டும். தனி வாகனப் பயன்பாட்டினைக் குறைத்து முடிந்தவரை பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் கடுமையான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அது மாத்திரமின்றி இதனை மீறுவோர் தொடர்பில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் பாதிப்புகள் குறித்து அரச நிறுவனங்கள் பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

வளிமண்டலம் மாசடைவதனைத் தடுத்து சுத்தமான வளியைச் சுவாசிக்க வேண்டிய கட்டாயத்தில் மனித குலம் உள்ளது என்பதனைக் கருத்திற் கொண்டு செயற்படுவோமாக.

தொடரும்...

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
வெள்ளிக்கிழமை / மலர் - 19 / இதழ் - 37 / 25 ஆடி 2025

# மஞ்சள் நிறத்தின் மகிமையை அறிவோமா

கி.யோகலிங்கம் (CMSO), பு.புவிராஸ் (DO), த.சிவானந்தன் (DO)










நமது உடலின் வயிற்றுப்பகுதியில் தொப்புளுக்கு சற்றுமேலே மணிபூரகம் என்ற சக்கரம் உள்ளது. இந்த சக்கரத்தின் நிறம் மஞ்சளாகும். நமது உடல் இயக்கத்திற்கு தேவையான சக்தியை இந்த மணிபூரகச் சக்கரம்தான் அளிக்கிறது. நம்மிடம் அச்சம், பொறாமை, கோபம், வெறுப்புணர்வு என்பனவற்றுள் ஏதாவது ஒன்றிருந்தால் இந்த சக்கரம் சரியாக செயல்படாதாம். கணையம் என்கின்ற சுரப்பி இதன் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மனிதர்களுக்கு ஏற்படுகின்ற மஞ்சட்காமாலை நோய், தோல் நோய், ஆஸ்துமா, வயிற்றுக்கோளாறுகள் என்பன இச்சக்கரம் சரியாக செயற்படாததால் உண்டானதே. எனவே கண்களை மூடிக்கொண்டு வயிற்றுப்பகுதியில் இந்த சக்கரம் மஞ்சள் நிறத்தில் சுழல்வதாக கற்பனையில் 5-10 நிமிடங்கள் மனக் கண்ணால் பாருங்கள். விசேடமாக தியானம் செய்பவர்கள் இந்த மஞ்சள் நிற சக்கரத்தை பாருங்கள். இதயம் சீராக இயங்கும். எல்லா நோய்களும் குணமாக ஆரம்பிக்கும்.

மலச்சிக்கலால் துயரப்படுவோர் மஞ்சள் மற்றும் சிவப்பு நிற பழங்களையும், காய் கறிகளையும் உணவில் சேர்த்து வந்தால் போதும். ஒரேஞ்ச், அப்பிள், முலாம்பழம், வாழைப்பழம், அன்னாசி இவற்றில் ஏதேனும் ஒன்றை உண்ணுங்கள். ஒரு கப் சாறாக எடுத்து அருந்துங்கள். ஒரு வாரம் இந்த முறை தொடர்ந்தால் மலச்சிக்கல் தீரும். வயிற்றுக் கோளாறுகளும் அகன்றுவிடும்.

மஞ்சள்நிற ஆடைகள், மஞ்சள்நிறப் படுக்கை விரிப்புகள், மஞ்சள்நிற கொட்டுண்கள் என்பன இன்சுலின் நன்கு சுரக்க உதவுகின்றன. விஞ்ஞான ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் மஞ்சள் நிற ஒளி அதிர்வுகள் மனதைப் பலப்படுத்துகின்றன என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

# பித்தப்பை கற்களா? அலட்சியம் வேண்டாம்



பித்தக் கற்களில் பெரும்பகுதி கொலஸ்ரோல், கல்சியம், கார்பனேட், கல்சியம் பிலி நபினேட் போன்றவற்றின் கூட்டான கலவையாகும். இக் கற்கள் யாருக்கு ஏற்படும்.

1. உடல் பருமனாக உள்ளவர்களுக்கு
2. பரம்பரை காரணமாகவும்
3. கருத்தடை மாத்திரைகளை அதிகமாக எடுப்பவர்களுக்கு
4. இரத்தச்சோகை நோய் இருப்பவர்களுக்கு
5. செக்ஸ் ஹோமோன் மாற்றங்களால்
6. தொடர்ச்சியாக விரதமிருப்பவர்களுக்கு
7. சிறுகுடல் பாதையில் ஏற்படும் வியாதிகளால்
8. நேர காலத்திற்கு உணவு உட்கொள்ளாமை

மேற்கூறிய காரணங்களால் பித்தநீர் அளவுக்கதிகமாக சுரந்து கற்களாக பித்தப்பையில் உறைந்துவிடும்.



# மருத்துவ மொழிகள்

01. ஆறு வெற்றிலை இருந்தால் அறியாதவன் வீட்டிலும் சாப்பிடலாம். பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.

02. காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய். ஒரு மண்டலம் உண்டால் முதுமையிலும் இளமை.

03. மேகம் போக்கும் ஆலம்பட்டை, பித்தம் போக்கும் வேப்பம்பட்டை.

04. ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டா.

05. ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன்.

06. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

07. மேகம் முற்றினால் வெள்ளை, வெள்ளை முற்றினால் வெட்டை, வெட்டை முற்றினால் கட்டை.

08. இறங்கு பொழுதில் மருந்து குடி.

09. வில்வம்பழம் தின்பார் பித்தம் போக பனம்பழம் தின்பார் பசியைப் போக்க.

10. குடலைக்கழுவி உடலைப் பேண்.



# தொலைந்த நினைவுகளோடு

காலங்கள் சடுதியாய் மாறுகின்றது
காயங்கள் மனதில் குவிகின்றது
மாற்றங்கள் துளிர்விட மறுக்கின்றது
மாயமான இவ் உலகில்

தொலைதூரம் சென்றாலும்
தொலைக்க முடியாத வடுக்களாக
முதியோர் இல்லங்களும் குவிந்து கிடக்கின்றன
முயன்றாலும் தடுக்க முடியவில்லை

ஆதரவற்றோர் இல்லங்கள் அதிகரிக்கன்றன – அதில்
அன்பிற்காய் ஏங்கும் உள்ளங்களும் ஏராளமாய்
சீரழிந்த சிறுமலர்கள் இங்கும் உண்டு
சீக்கரமே சலவை செய்ய வேண்டும் இப் பூமியை

பதியப்பட்ட பல உண்மைகளை நினைவில் வைத்து
பறைசாற்ற முடியாமல் பரிதவிக்கும் உள்ளங்கள் ஏராளம்
ஏற்க முடியவில்லை இவ் உண்மையை
ஏங்குகின்றேன் தொலைந்து போன நினைவுகயோடு...

கிருபைராணி ரவீந்திரராஜா
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

# யுத்த வடு

மௌனமாகப் பேசும் அந்த மண்,
படுகாயங்களால் பிழிந்த போர்க்களம்,
ஓர் அம்மாவின் அழுகையில்
இன்னொரு உலகம் உருகுகிறது.

சிறு பிள்ளையின் சிரிப்பு,
தொலைந்தது குண்டின் ஒலியில்
பாலூட்டும் கைகளில்
பிரிவின் பிணைப்பு – ஒரு வடு.

நெஞ்சைச் சிதைத்த நெருப்புகள்,
வீடுகளைப் பொடியாக்கிய விமானங்கள்,
கண்ணீரால் ஆன கிணறுகள் – இவை எல்லாம்
யுத்தத்தின் மாறாத வடு.
அந்த வீதி சொல்கிறது,
“இங்கே நடக்கவில்லை வெற்றி,
மட்டும் ஒரு தோல்வி: மனிதம்.”



காற்றும் இப்போது துக்கம் பேசும்,
மரங்களும் சுமந்திருக்கும் சாட்சியங்கள்,
தலைகளை இழந்த
பனைமரங்களும்
தென்னை மரங்களும்
சொல்லும் கதை
புதிய காலம் வந்தாலும்
பழைய வடு மறையாது.

படைப்பு:
சீதா வாசன்



# மட்டன் 65

## தேவையான பொருள்கள்

மட்டன் - 1kg
கடலை மா - 4 ஸ்பூன்
சோளன் மா - 3 ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 4 ஸ்பூன்
இஞ்சி, பூண்டு விழுது - 2 ஸ்பூன்
சீரகத்தூள் - 2 ஸ்பூன்
எலுமிச்சைச் சாறு - 2 ஸ்பூன்
நீர் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

## செய்முறை

* முதலில் மட்டனை துண்டுகளை நன்றாக சுத்தம் செய்து கழுவி, குக்கரில் போட்டு 5 விசில் விட்டு வேக வைத்து இறக்கி நீரை வடித்துக்கொள்ள வேண்டும்.

* பின்னர் கடலை மா, சோளன் மா, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், இஞ்சி, பூண்டு விழுது, சீரகத்தூள், எலுமிச்சைச் சாறு மற்றும் தேவையாள அளவு உப்பு சேர்த்து சிறிதளவு நீர் விட்டு கெட்டியான பேஸ்ட் போன்று தயாரித்துக் கொள்ளவும்.

* அதன் பின்னர் தயாரித்து வைத்த கெட்டியான பேஸ்ட்டில் வேக வைத்த மட்டன் துண்டுகளை போட்டு நன்றாக புரட்டி எடுத்து சூடான எண்ணையில் பொரித்து எடுத்தால் சுவையான மட்டன் 65 ரெடி.

R.Rupiga
Development Officer

# மாணவர்களே எனது இலக்கு என்கிறார்: கலாவதி விஜயகுமார்



அண்மையில் நாம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 15ஆம் கிராமத்தில் இயங்கும் இந்துமாமன்ற அறநெறி பாடசாலையின் பொறுப்பாசிரியரின் சேவையையும் மாணவர்களுடன் அவர் காட்டும் அக்கறையையும் காணக்கிடைத்தது. இவர் பற்றிய தேடலை நாவெளி பத்திரிகையின் "படலையைத் தேடி" பக்கம் சுமந்து வருகிறது..

## முதலில் உங்களைப் பற்றி கூறுங்கள் திருமதி கலாவதி

நான் நாவிதன்வெளி பிரதேசத்தின் 15ஆம் கிராமம் 154ஆம் இலக்க வீட்டில் வசித்து வருகின்றேன். 1978ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 4ஆம் திகதி கந்தையா தம்பிப்பிள்ளை என்பவருக்கும் ஆறுமுகம் பூமணி என்பவருக்கும் மகளாகப் பிறந்தேன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உள்ளனர். நாங்கள் குடும்ப உறவுகளோடு மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றோம். எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

## மாணவர்களுக்கு போதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்குள் எப்படி வந்தது?

உண்மையில் படிப்பதற்கு வசதி இல்லாத ஏழைப் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசையாகும். எனக்கு கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை நான் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றேன். மாணவர்களே என்னுடைய இலக்காகும். அவர்களை சமுதாயத்தில் நேரிய சிந்தனை உள்ளவர்களாக, ஒழுக்கம் நிறைந்தவர்களாக சமயக் கல்வியையும் உலக கல்வியையும் கற்று வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்பது எனது ஆசையாகும். நான் ஆரம்பக் கல்வியை 15ஆம் கிராமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 08 வரை கல்வி கற்றேன். பின்னர் சாதாரண தரம் வரை சது /கமு/ விவேகானந்தா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டேன். சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தேன். எனது மேற்படிப்பை தொடர்வதற்கு வசதி இல்லாத காரணத்தினால் என்னால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை. என்னால் படிக்க முடியவில்லை என்ற இந்த ஏக்க உணர்வு ஏனைய மாணவர்களுக்குள் வரக்கூடாது என்பதற்காக பல தியாகங்கள், கஷ்டங்களுக்கு மத்தியில் இவர்களை நான் வழிபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

## கல்வித்துறை தவிர உங்களுக்கு வேறு எவ்வாறான துறைகளில் ஆர்வம் இருக்கிறது?

எனக்கு விளையாட்டு அதிகம் விருப்பம். பாடசாலை காலங்களில் இல்ல விளையாட்டு போட்டிகளில் பங்கு கொண்டு முதலிடங்களைப் பெற்று வெற்றி பெற்று இருக்கிறேன். அதற்கான சான்றிதழ்களும் விருதுகளும் எனக்கு கிடைக்கப்பெற்றன. கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்று பல பரிசுகளைப் பெற்றிருக்கிறேன்.

பனை ஓலை கைப்பணி பயிற்சியை நான் பூர்த்தி செய்துள்ளேன். பனை ஓலை பயிற்சி ஆசிரியராகவும் சுமார் 50 மாணவர்களுக்கு பயிற்சியும் வழங்கி அதில் சான்றிதழ்களும் பரிசுகளும் எனக்கு கிடைக்கப்பெற்றன. 2000ஆம் ஆண்டு தை மாதம் 06ஆம் திகதியிலிருந்து இன்றுவரை 25 ஆண்டுகள் இந்து மாமன்ற அறநெறி பாடசாலையில் ஆசிரியராகவும், பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டு வருகிறேன். என்னிடம் 100 மாணவர்கள் தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## அறநெறி பாடசாலையில் கற்கின்ற மாணவர்களோடு நல்லுறவோடு பழகும் பொழுது இந்தப் பணியை எப்படி பார்க்கின்றீர்கள்?

மாணவர்களோடு பழகக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். பாடசாலைக்கு வந்ததும் மனமகிழ்ச்சியாக இருக்கும். எல்லா மாணவர்களிலும் நான் அதிக கவனம் செலுத்துவது வழமை. எமது அறநெறி பாடசாலையிலே நான் கற்றுக் கொடுத்த மாணவர்கள் பலர் இப்போது பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு இருப்பது எனக்கு பெருமையான விடயமாகும். எனது இந்து மாமன்ற அறநெறி பாடசாலை நாவிதன்வெளிப் பிரதேசத்தில் ஒரு சிறந்த பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு இரண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. ஒரு சிறந்த பாடசாலையாகவும் சிறந்த ஆசிரியராகவும் பிரதேச மட்ட, மாவட்ட , மாகாணமட்ட போட்டிகளிலும் நற்சான்று வழங்கி விருதுகளும் வழங்கி என்னை பாராட்டி கௌரவித்திருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னுடைய சேவைக் கால அர்ப்பணிப்பான செயற்பாடு ஆகும்.

## உங்களுடைய பிள்ளைகள் குடும்பங்களைப் பற்றி சொல்லுங்கள்.

நான் 2004ஆம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள காமத்தை என்னும் கிராமத்தில் வசித்து வந்த தேக்கமலை விஜயகுமார் என்பவரை திருமணம் செய்துள்ளேன். எனக்கு இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். வி. ரிஷாழினி, இவர் எனது மூத்த மகள் உயர்தர பரீட்சையில் 2A,1B பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். பி. கவிநயா புலமை பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இது எனக்கு பெருமைக்குரிய விடயமாகும். மாணவர்களுக்கு கற்பிக்கும் வாய்பைப் பெரும் பாக்கியமாக கருதுகிறேன். என்னுடைய பிள்ளைகளைப் போல் எல்லாப் பிள்ளைகளும் கல்வியில் உயர்ந்து செல்ல வேண்டும். கல்வியில் உயர்ந்து செல்வதற்கு அவர்களுக்கு வறுமை ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது என்பது என்னுடைய முக்கிய அவாவாகும்.

## ஏனைய அறநெறி ஆசிரியர்களுக்கும் சமூகத்திற்கும் நீங்கள் சொல்லும் செய்தி என்ன?

ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு மாணவர்களில் அதிக அக்கறை செலுத்தும்போது அது நமக்கு ஒரு மனத் திருப்தியைத் தருகிறது. மாணவர்கள் மத்தியிலும் நாம் மதிக்கப்படுகிறோம் என்பதை எனது இந்தச் சேவையில் நான் கண்ட முக்கிய விடயமாகும். மாணவர்களுக்கு சமயக் கல்வியும் சமூகம் சார் புத்தகக் கல்வியும் முக்கியமாகும்.

எனவே, வெறுமனே கல்வியை மட்டும் நாம் கற்றுக் கொள்வதிலும் பார்க்க ஒழுக்கத்தோடு நிறைந்த கல்வியைக் கற்றால் அது நமக்கு எப்போதும் பிரயோசனம் உள்ளதாக இருக்கும். மாணவர்களுக்குள் ஒழுக்கத்தையும் நமது சமயம் சொல்லுகின்ற விடயங்களையும் தவறாது நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத்தான் நான் விரும்புகிறேன். என்னுடைய சேவை காலம் இன்னும் தொடர வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நன்றி கலாவதி விஜயகுமார் அவர்களின் கற்பித்தல் பணி இன்னும் நீண்டு செல்ல வேண்டும் என்று நாவெளி சஞ்சிகை படலையைத்தேடி குழுவினர் ஊடாக தனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


*தொகுப்பு:*

ஏ.எல்.எம். ஷினாஸ்,

என்.நீலேந்திரன், ஏ.ஏ.அஸீம்

# நாவெளி NAAVELI நாவெளி

பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை



**நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் தொடர்ச்சியாக வெளிவருகின்ற நாவெளி இலத்திரனியல் மின்னிதழுக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

மின்னிதழ் குழு

பின்வரும் தலைப்பு களில் ஆக்கங்களை அனுப்ப முடியும்.

- வாழ்வியல் தத்துவம்
- பொருண்மியம்
- உலக அரசியல்
- கதைச் சாளரம் (சிறுகதை, மர்மத் தொடர்)
- அறிவுக்களஞ்சியம்
- மாணவர் அரங்கம்
- கல்வி, சட்டம் கற்போம்
- மனிதம் அல்லது மானுடம்
- விளையாட்டும் தேகாரோக்கியமும்
- கதம்பம் - (சமையல் கலை / அழகும் ஆரோக்கியமும் / வீட்டுக் குறிப்பு )
- பெண்ணியம்
- மருத்துவமும் நாமும்
- கவிதைச்சாரல் (மரபுக்கவிதை, நவீன கவிதை, ஹைக்கூ)

கவனிக்க வேண்டியவை:


- ஒரு ஆக்கம் வேறு ஏதேனும் பிரசுரிப்பில் வந்திருந்தால், அதன் மறு பிரசுரம் என்பதை தாங்கள் உறுதிப் படுத்தல்.
- தகவலுக்கான பொறுப்பினை தாங்கள் எடுத்தல்.
- உத்தியோகப் பற்றற்ற, சந்தேகத்திற்கு இடமான தகவல் என நீங்கள் கருத்துமிடத்து, அதனை எமக்கு அனுப்பாதிருத்தல்.
- ஆக்கமும், ஆக்கம் தருபவர் பெயரும், தங்களிடம் எதிர் பார்க்கப்படும்.
- சஞ்சிகைக் குழுவின் இறுதித் தீர்மானத்தின் படி ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

**தங்கள் ஆக்கங்களின் மென்பிரதிகளை (Soft Copy)**

**▶ 0755424333 எனும் WhatsApp இலக்கத்திற்கு**

**▶ it@navithanveli.ds.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு**

**ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க முடியும்.**



**உங்கள் ஆதரவை எதிர்பார்த்து...**
**என்றும் அன்புடன்,**
மின்னிதழ் குழு